# மக்களவைத் தேர்தல்

# 2024

# தி.மு.க. தேர்தல் அறிக்கை

# மக்களவைத் தேர்தல் - 2024

## நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு

---

**திருமிகு கனிமொழி கருணாநிதி** எம்.பி, - **குழுத்தலைவர்**
(கழகத் துணைப் பொதுச் செயலாளர்)

**திரு. டி.கே.எஸ். இளங்கோவன்**
(தலைமைக் கழக செய்தித் தொடர்பு தலைவர்)

**திரு.ஏ.கே.எஸ் விஜயன்**
(கழக விவசாய அணிச் செயலாளர்)

**மாண்புமிகு. பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன்**
(கழகச் சொத்து பாதுகாப்புக் குழு செயலாளர்)

**மாண்புமிகு. டி.ஆர்.பி. ராஜா**
(கழகத் தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர்)

**மாண்புமிகு. கோவி. செழியன்**
(கழக வர்த்தகர் அணி துணைத் தலைவர்)

**திரு.கே.ஆர்.என். ராஜேஸ்குமார்** எம்.பி

**திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்** எம்.எல்.ஏ
(கழக மாணவரணிச் செயலாளர்)

**திரு. எம்.எம். அப்துல்லா** எம்.பி
(கழக அயலக அணிச் செயலாளர்)

**திரு. எழிலன் நாகநாதன்** எம்.எல்.ஏ
(கழக மருத்துவ அணிச் செயலாளர்)

**மாண்புமிகு. பிரியா**
(சென்னைப் பெருநகர மேயர்)

# பொருளடக்கம்


| வ. எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1 | முகவுரை | 7 |
| 2 | இந்திய அரசியல் சாசன முகப்பு | 8 |
| 3 | திராவிட மாடல் அரசின் வெற்றி முத்திரைகள் | 9 |
| 4 | மாநில சுயாட்சி | 12 |
| 5 | ஆளுநர் நியமனம் | 13 |
| 6 | அரசியல் சட்டப் பிரிவு 356 அகற்றப்பட வேண்டும் | 13 |
| 7 | சென்னையில் உச்சநீதிமன்றத்தின் கிளை | 13 |
| 8 | புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து | 14 |
| 9 | மொழிக் கொள்கை (Language Policy) | 14 |
| 10 | தாயகம் திரும்பிய தமிழர் குடியுரிமை | 16 |
| 11 | சேதுசமுத்திரத் திட்டம் | 16 |
| 12 | ஒன்றிய அரசின் முகமைகள் | 17 |
| 13 | பா.ஜ.க. அரசின் வாய் ஜாலங்கள் | 17 |
| 14 | பா.ஜ.க. அரசின் ஊழல்கள் சில | 19 |
| 15 | ஜம்மு காஷ்மீர் மாநில அந்தஸ்து ரத்து | 21 |
| 16 | புதிய கல்விக் கொள்கை | 21 |
| 17 | இடஒதுக்கீடு | 22 |
| 18 | ஒன்றிய அரசில் பங்கேற்று தமிழ்நாட்டின் வளம்பெருக்கிய தி.மு.கழகம் | 23 |
| 19 | இந்தியா கூட்டணி அரசு நிறைவேற்ற உள்ள திட்டங்கள் | 26 |
| 20 | இளைஞர் நலன் | 31 |
| 21 | மகளிர் நலன் | 32 |

| வ. எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 22 | புலம்பெயர்வோர் நலன் | 33 |
| 23 | மீனவர் நலன் | 35 |
| 24 | குழந்தைகள் நலன் | 38 |
| 25 | தொழிலாளர் நலன் | 39 |
| 26 | பேரிடர் மேலாண்மை | 41 |
| 28 | சிறுபான்மையினர் நலன் | 42 |
| 29 | நீதித்துறை | 42 |
| 30 | விளையாட்டு | 43 |
| 31 | சமூக நீதி | 44 |
| 32 | சாதிவாரிக் கணக்கெடுப்பு | 45 |
| 33 | சமூக நல்லிணக்கம் | 46 |
| 34 | பொருளாதாரம் | 46 |
| 35 | வணிகர் நலம் | 47 |
| 36 | சரக்கு மற்றும் சேவை வரி (ஜி.எஸ்.டி) சீர்திருத்தம் | 47 |
| 37 | நெசவாளர் நலன் | 48 |
| 38 | மருத்துவம் மற்றும் குடும்ப நலன் | 49 |
| 39 | விவசாயம் | 51 |
| 40 | ராணுவ வீரர் நலன் | 52 |
| 41 | தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கான திட்டங்கள் | 53 |

# மக்களவைத் தேர்தல்

# 2024

# தி.மு.க. தேர்தல் அறிக்கை

இந்தியாவிலேயே திராவிட முன்னேற்றக் கழகம்தான் தேர்தலுக்கு முன்பாக தேர்தல் அறிக்கை தயாரித்து - நாங்கள் பொறுப்புக்கு வந்தபின் இன்னின்ன திட்டங்களை நிறைவேற்றுவோம் என வாக்குறுதிகளைப் பட்டியலிட்டு வழங்கி, அதனை மக்கள் முன்வைத்து – மக்களின் ஆதரவைக் கோரி தேர்தல் களத்தில் இறங்கும் முறையை உருவாக்கிய முதல் இயக்கம்.

அதுமட்டுமல்ல! தேர்தல் அறிக்கை மூலம் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை ஆட்சி அதிகாரம் பெற்று சட்டங்களாகவும், திட்டங்களாகவும் தந்து நிறைவேற்றி இந்தியத் திருநாட்டின் முன்னேற்றத்திற்குத் துணைபுரிந்துள்ளதுடன் தமிழ் மொழி, தமிழ்ச் சமுதாயம், தமிழ்நாடு மாநிலம் அனைத்தும் தனித்தன்மை பெறச்செய்து இந்திய அளவில் அனைத்து மாநிலங்களுக்கும் முன்னோடி மாநிலமாக நின்று வழிகாட்டி வரலாறு படைத்துள்ள மாபெரும் இயக்கமும் திராவிட முன்னேற்றக் கழகம்தான்.

இந்த உணர்வுகளோடு 18ஆவது இந்திய நாடாளுமன்றத்திற்கான தேர்தல் அறிக்கை தயாரிக்கப்பட்டு கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாட்டு மக்கள் முன் வைக்கப்படுகிறது.

**ஒன்றுபடுவோம்!**

**வெற்றி காண்போம்!**

**சொன்னதைச் செய்வோம்!**

**செய்வதைச் சொல்வோம்!**

**நாடும் நமதே -**

**தமிழ்நாட்டின் நாற்பதும் நமதே!**

# இந்திய அரசியல் சாசன முகப்பு

இந்திய நாட்டை, மதச்சார்பற்ற சமதர்மக் குடியரசாக அமைப்பதற்கு இந்திய மக்களாகிய நாங்கள் உறுதி பூண்டு, இந்திய மக்கள் அனைவருக்கும், சமூக, பொருளாதார, அரசியல் நீதி, எண்ண, எழுத, எடுத்துச் சொல்ல, நம்பிக்கை வைக்க, வழிபாடு செய்ய சுதந்திரம், தரத்திலும் தகுதியிலும் வாய்ப்பிலும் சமத்துவம் ஆகியவற்றை அளிப்பதற்கும் எங்களிடையே தனிமனிதரின் கௌரவம் மற்றும் தேசிய ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் உறுதியளிக்கத் தக்க சகோதரத்துவத்தை வளர்க்கவும் உறுதி எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்ற அரசியல் சாசனத்திற்கு முரணாக பா.ஜ.க அரசு கடந்த பத்தாண்டுகளாகச் செயல்பட்டு நாட்டைச் சீரழிக்கிறது.

“வேற்றுமையில் ஒற்றுமை” என்ற நிர்மாண முழக்கங்களால் அமைக்கப்பட்ட நாடு, பிரித்தாளும் பா.ஜ.க. அரசாங்கத்தால் துண்டாடப்படுகிறது. இன, மொழி மற்றும் மத வேறுபாடுகளை எதிர்கொண்டு ஜனநாயக ஆட்சியை நிலைநிறுத்தியது மற்றும் இந்தியா என்ற ஒரே கூரையின் கீழ் நமது பல்வேறு சமூகங்களை ஒன்றிணைத்ததால் இந்திய அரசியலமைப்புச் சட்டம் தனித்தன்மை வாய்ந்தது என்று அரசியலமைப்புச் சட்டத்தை வடிவமைத்த சிற்பிகள் தெரிவித்தனர்.

பா.ஜ.க. வினர் அரசியல் ஆதாயங்களுக்காக அரசியல் சாசனத்தில் இருந்து “மதச்சார்பற்ற” என்ற வார்த்தையை நீக்கலாம் என்று கூறியுள்ளனர்.

இத்தகைய எண்ணங்களால் இந்திய அரசியலமைப்பு இப்போது அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால், நாட்டின் மதச்சார்பின்மை மற்றும் கூட்டாட்சி அமைப்பை அழிக்க எதையும் செய்வார்கள்.

ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை கொண்ட அரசியல் கட்சிகள் இணைந்து, “இந்தியா” என்னும் கூட்டணியை உருவாக்கி சர்வாதிகார பா.ஜ.க. ஆட்சியை அகற்ற வேண்டும் என்னும் குறிக்கோளுடன் 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலைச் சந்திக்கின்றன.

இத்தகைய சூழ்நிலைகளில், பா.ஜ.க. அரசு வரும் நாடாளுமன்றத் தேர்தலில் கண்டிப்பாக வீழ்த்தப்பட வேண்டும் என திராவிட முன்னேற்றக் கழகம் உறுதி கொண்டுள்ளது. எனவே, அனைத்துப் பிரச்சினைகளையும் மிகக் கவனமாகப் பரிசீலித்து, இந்தியாவை ஜனநாயகக் கூட்டாட்சிக் குடியரசாக

நிலைநிறுத்துவதில் திமுக உறுதி கொண்டுள்ளது. எனவே, பாசிச வெறிபிடித்த, மத ஆதிக்கவாதிகளிடமிருந்து நாட்டைப் பாதுகாத்திட அரசியல் சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களைத் தேர்தல் அறிக்கையில் இணைத்து வலியுறுத்துகிறது.

மாநிலங்களை வலுவிழக்கச் செய்யவும், அவற்றின் பங்கைக் குறைக்கவும் அனைத்து முயற்சிகளும் பா.ஜ.க அரசால் மேற்கொள்ளப்படுகின்றன. மாநிலங்கள் அவர்களுடன் உடன்பட்டால் அது மிகவும் நல்லது. மாநிலங்கள் உடன்படவில்லை என்றால், அவர்கள் மாநிலங்களை பலவீனப்படுத்த எல்லா வழிகளையும் பயன்படுத்துகிறார்கள். பா.ஜ.க ஆட்சியில் இல்லாத மாநிலங்கள் இரண்டாம் தரமாக நடத்தப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் நன் மதிப்பினைக் குறைக்கும் கருவியாக ஆளுநர், சி.பி.ஐ., அமலாக்கத்துறை மற்றும் வருமானவரித்துறை போன்ற ஒன்றிய அமைப்புகள் பயன்படுத்தப்படுகின்றன. மாநிலங்களில் நிதி மேலாண்மையில் தலையிடுவதுடன் உரிய நியாயமான நிதிப் பகிர்வை வழங்குவதில்லை.

# திராவிட மாடல் அரசின் வெற்றி முத்திரைகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் தமிழ்நாடு சமூக, பொருளாதார, அரசியல் தளங்களில் முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தியாவிற்கே வழிகாட்டும் பல முற்போக்குத் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறார்கள். கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் வாயிலாகத் தமிழ்நாட்டில் 1 கோடியே 15 இலட்சம் மகளிர் மாதம் 1000 ரூபாய் பெற்று மகிழ்கிறார்கள்.

அரசுப் பள்ளிகளில் படித்துக் கல்லூரியில் சேரும் மாணவியருக்கு மாதம் 1000 ரூபாய் வழங்கும் புதுமைப் பெண் திட்டத்தில் 4.82 இலட்சம் மாணவிகள் பயன் பெறுகின்றனர். ஏறத்தாழ 3 இலட்சம் மாணவர்களும் பயன்பெறும் வகையில் தமிழ்ப்புதல்வன் திட்டம் செயலாக்கப்படுகிறது.

தொழில் வளம் பெருக்கிட, உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் ரூ.9.75 லட்சம் கோடி தொழில் முதலீடுகளை ஈர்த்து ஏறத்தாழ 30 இலட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் பெருகிட வகை செய்யப்பட்டுள்ளது.

அரசுப்பள்ளிகளில் 1 முதல் 5 வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்குக் காலை உணவுத்திட்டத்தை நாட்டிலேயே முதன் முறையாகத் தொடங்கி நாள்தோறும் 16 இலட்சம் குழந்தைகள் பசியாற உண்டு, பள்ளிப்படிப்பில் கவனம் செலுத்தி வருவது கண்டு மக்கள் இந்த அரசைப் பாராட்டி வருகின்றனர். இத்திட்டம் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் விரிவாக்கம் செய்யப்பட உள்ளது.

மகளிர் அனைவருக்கும் அரசுப் பேருந்துகளில் கட்டணமில்லாத, **விடியல் பயணத் திட்டம்** நடைமுறைப்படுத்தப்பட்டு 447 கோடி முறை பெண்கள் பயணம் செய்து மாதம் சராசரியாக 888 ரூபாய் வரை சேமிக்கிறார்கள் என ஆய்வுகள் கூறுகின்றன.

குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைபாடுகளை நீக்கிட ஊட்டச்சத்தை உறுதிசெய் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு 74 சதவீத குழந்தைகள் குறைபாடுகள் நீங்கி இயல்பு நிலைக்கு மீண்டுள்ளனர்.

மாண்புமிகு முதலமைச்சரின் கனவுத் திட்டமான நான் முதல்வன் திட்டத்தின் வாயிலாக ஏறத்தாழ 28 லட்சம் மாணவ மாணவியர் தொழில் திறன் பயிற்சிகள் பெற்று வேலைவாய்ப்புகளைப் பெற்று வருகின்றனர்.

- இல்லம் தேடி கல்வித் திட்டத்தில் - 24.80 லட்சம் குழந்தைகள்
- மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தில் - 1.70 கோடி பேர்
- முதல்வரின் முகவரி திட்டத்தில் - 19.69 லட்சம் பேர்
- மக்களுடன் முதல்வர் திட்டத்தில் - 3.40 லட்சம் மனுக்களுக்குத் தீர்வு
- நம்மைக் காக்கும் 48 திட்டத்தில் - 2 லட்சம் பேர் எனப் பயன் பெற்று வருபவர்களின் எண்ணிக்கை நீள்கின்றன, திட்டங்களும் வளர்கின்றன.

இவையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் திராவிட நாயகர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் முத்திரைத் திட்டங்களில் சில.

இத்திட்டங்கள் பல பல்வேறு மாநிலங்களில் பல்வேறு பெயர்களால் பின்பற்றப்படுகின்றன. குறிப்பாக, மகளிர்க்கு மாதம் ரூ.1000 தரும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் கர்நாடக மாநில அரசால் ஏற்கப்பட்டு பின்பற்றப்படுகிறது.

திராவிட இயக்கத்தின் மாபெரும் தலைவர்களான தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் அறிவுறுத்திய கொள்கைகள் மூலம், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமையும் காலங்களிலெல்லாம் மக்கள் பயன்பெறும் பல்வேறு திட்டங்கள் புதிது புதிதாக நிறைவேற்றப்பட்டு மக்கள் முன்னேற்றம் அடைந்து வருகின்றனர்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோர் எழுச்சி மிகுந்த திராவிட இயக்கத்தைச் சமதர்மம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய உன்னதமான கொள்கைகளுடன் நிறுவியுள்ளார்கள். இந்த மகத்தான தலைவர்களின் வழியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை மக்கள் இயக்கமாக வளர்த்தெடுத்தார்கள். ஐந்து முறை தமிழ்நாடு முதலமைச்சராக விளங்கி மிகப்பெரிய அளவில் கல்வி, அறிவியல், சமூக, பொருளாதார, தொழில் வளர்ச்சி பெற்ற மாநிலமாகத் தமிழ்நாட்டை உருவாக்கினார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பட்டியலின, பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட சமுதாயங்கள் முன்னேற்றம் கண்டன. இந்திய மாநிலங்களில் முன்னேற்றம் பெற்ற மாநிலமாகத் தமிழ்நாடு உயர்ந்து மனித வளக் குறியீடுகளில் சிறந்த மாநிலமாக எழுச்சி பெற்றுள்ளது.

1916இல் தோன்றிய நீதிக்கட்சியின் மூலம் தமிழர்கள் தமிழ்ச் சமுதாயத்தின் தொன்மை வரலாறுகளையும், அன்றைய சமூக வாழ்வின் அவல நிலைகளையும் அறிந்து விழிப்புணர்வு பெற்றனர். நீதிக்கட்சியைத் தோற்றுவித்த மாபெரும் தலைவர்களான டாக்டர் சி.நடேசனார், சர்.பிட்டி.தியாகராயர், டாக்டர் டி.எம்.நாயர் ஆகியோரின் தலைமையிலும், சீரிய வழிகாட்டுதலிலும் 1920 முதல் 1937 வரை நீதிக்கட்சி ஆட்சி புரிந்தது. அதன்பயனாக தமிழ்நாடு சமூகநீதி இயக்கத்தின் தாயகமாக உருவெடுத்தது. திராவிட சமுதாயத்தில் நிலவிய சமூக அநீதிகளையும் சமத்துவமற்ற அடக்குமுறைகளையும் நீக்கி – சுயமரியாதையைக் காப்பதில் நீதிக்கட்சி ஒரு புரட்சியை ஏற்படுத்தியது.

அந்த நீதிக்கட்சியின் பெயர் 1944 ஆம் ஆண்டில் சேலம் மாநாட்டில் பேரறிஞர் அண்ணா முன்மொழிந்த தீர்மானத்தால் திராவிடர் கழகம் எனப் பெயர் மாற்றம் பெற்று, தந்தை பெரியார் அவர்களின் தலைமையில் செயல்படத் தொடங்கியது.

தமிழ் மொழியின் தனித்தன்மையைக் காக்கவும், தமிழ்ச் சமுதாயத்தின் பெருமைகளை மீட்டெடுக்கவும், பேரறிஞர் அண்ணா அவர்களால் 1949 இல் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற அரசியல் கட்சியாகத் தோற்றுவிக்கப்பட்டது.

இந்த இயக்கம் கடந்த 75 ஆண்டுகளில் பல தடைகளையும், நெருக்கடிகளையும் சந்தித்தபோதும் அஞ்சாத நெஞ்சுரத்தோடு வெற்றிகளையும் தோல்விகளையும் சந்தித்து புகழ்க் கோபுரத்தின் உச்சியைத் தொட்டு மிளிர்ந்து கொண்டிருக்கிறது.

ஓய்வில்லாத உழைப்பின் வாயிலாகவும், பல்வேறுபட்ட திட்டங்களின் மூலமும் இணையற்ற தலைவராகத் திகழும் மாண்புமிகு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களால் திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து, பல்வேறு வெற்றிகளை ஈட்டி வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்திவரும் திட்டங்களும், அவை மக்களுக்கு அளித்துவரும் பயன்களும், அதற்க்கு பத்திரிகைகளும், ஊடகங்களும், அளித்து வரும் பாராட்டுகளும் பிற மாநிலங்களைத் தமிழ்நாட்டின் பக்கம் திருப்பி, திராவிட மாடல் ஆட்சியின் பெருமைகள் இன்று இந்திய நாடு முழுமையிலும் எதிரொலிக்கச் செய்துள்ளது. இவை இன்றைய நாடாளுமன்றத் தேர்தலுக்குத் தமிழ்நாட்டை ஒரு முன்மாதிரி மாநிலமாகக் கொள்ள பிற மாநிலங்களுக்கு வழிகாட்டுகின்றன.

## மாநில சுயாட்சி

பேரறிஞர் அண்ணா அவர்களின் மாநில சுயாட்சிக் கொள்கையை நிறைவேற்றும் வகையில் இந்தியாவிலேயே முதல்முறையாக ஒன்றிய – மாநில உறவுகளை ஆராய்வதற்காக, 1969 ஆம் ஆண்டில் நீதிபதி இராசமன்னார் தலைமையில் நீதிபதி சந்திராரெட்டி, டாக்டர். ஏ.இலட்சுமணசாமி முதலியார் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு வல்லுநர் குழுவை முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான தி.மு.கழக அரசு அமைத்தது. ஒன்றிய – மாநில உறவுகள் குறித்துப் பரிசீலனை செய்ய நீதிபதி சர்க்காரியா தலைமையில் ஒரு குழுவை 1983 ஆம் ஆண்டில் ஒன்றிய அரசு அமைத்தது. மீண்டும், 2000 ஆம் ஆண்டில் நீதிபதி வெங்கடாசலய்யா தலைமையில் ஒரு குழுவையும் ஒன்றிய அரசு அமைத்தது. அதன் தொடர்ச்சியாக, 2004 ஆம் ஆண்டு ஒன்றியத்தில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி அமைந்தபோது, மாநிலங்கள் அதிக அதிகாரங்கள் பெறுவதற்குரிய நடவடிக்கைகளை ஒன்றிய அரசு எடுக்க வேண்டுமென்று தி.மு.க. வலியுறுத்தியது, அதன் காரணமாக, 2007 இல் ஒன்றிய – மாநில அரசுகளின் உறவுகளைச் சீரமைப்பதற்காக நீதிபதி எம்.எம். பூஞ்சி தலைமையில் ஒன்றிய அரசு ஓர் ஆணையத்தை அமைத்தது. எனினும் முக்கியமான இந்தத் தேசியப் பிரச்சினையில் ஆக்கபூர்வமான முடிவுகள் எடுக்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

ஆகவே, மாநில சுயாட்சி மற்றும் மாநில உறவுகள் குறித்து மேலே குறிப்பிடப்பட்டுள்ள நான்கு குழுக்களின் பரிந்துரைகளையும் முழுமையான விவாதங்களுக்கு உட்படுத்தி மாநிலங்கள் உண்மையான சுயாட்சி பெற்றிடும் வண்ணம், அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கான நடவடிக்கைகளை தி.மு. கழகம் ஒன்றியத்தில் அமையும் புதிய ஆட்சியைத் தொடர்ந்து வலியுறுத்தும்.

## ஆளுநர் நியமனம்:

ஆளுநர் பதவி தேவையில்லை என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கியக் கொள்கைகளில் ஒன்று. ஆனால் நடைமுறையில் ஆளுநர் பதவி நீடித்துவரும் நிலையில் மாநில ஆளுநர்களை நியமிக்கும்போது அந்தந்த மாநில முதலமைச்சர்களின் ஆலோசனைகளைப் பெற்று, ஆளுநர்களை ஒன்றிய அரசு நியமிக்க வேண்டும் என நீதிபதி எம்.எம்.பூஞ்சி, நீதிபதி வெங்கடாசலையா, நீதிபதி சர்க்காரியா ஆகியோர் ஏற்கனவே பரிந்துரைத்துள்ளனர்.

இப்பெருமக்களின் பரிந்துரைகளுக்கேற்ப ஆளுநர்களை நியமிக்கும் போது மாநில முதலமைச்சர்களின் ஆலோசனையுடன் நியமித்திட புதிய அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று அரசியலமைப்புச் சட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. மாநில ஆளுநர்களுக்கு அதிலிருந்து விலக்கு அளிக்கும் இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 361ஐ நீக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஆளுநரும் சட்ட நடவடிக்கைக்கு உட்பட்டவர் என்ற நிலை உருவாக்கப்படும்.

## அரசியல் சட்டப் பிரிவு 356 அகற்றப்பட வேண்டும்:

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளைக் கலைத்திட வழிவகுக்கும் அரசமைப்புச் சட்டப் பிரிவு 356ஐ அகற்றிட தி.மு.க. தொடர்ந்து வலியுறுத்தும்.

## சென்னையில் உச்சநீதிமன்றத்தின் கிளை:

உச்ச நீதிமன்றத்தின் கிளைகளை பிற வரையறுக்கப்பட்ட இடங்களில் அமைக்கலாம் என்று இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 130இல் கூறப்பட்டுள்ளது. 12 வது சட்டக் கமிஷனின் தலைவர் ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி திரு.ஏ.ஆர்.லெட்சுமணன் அவர்கள் “சட்டக் கமிஷன் Report No.230 Date: 5.8.2009 அறிக்கையில்” இதைக் குறிப்பிட்டுள்ளார். எனவே உச்சநீதிமன்றத்தின் கிளையைச் சென்னையில் அமைக்க வலியுறுத்தப்படும்.

## புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து

புதுச்சேரி யூனியன் பிரதேசம் மக்கள் தொகையிலும் பல்வேறு வகையிலும் வெகு வேகமாக வளர்ந்து வரும் நிலையில், புதுவை மாநில அரசு நிர்வாகம், தேவையான அதிகாரங்களைப் பெற்றிடாததால் மக்களின் தேவைகளையும், கோரிக்கைகளையும் தாமதமின்றி நிறைவேற்ற இயலாத நிலையில் புதுவை அரசு உள்ளது. எனவே, புதுச்சேரியைவிட குறைந்த மக்கள்தொகை கொண்ட மிசோரம், முழு மாநில அந்தஸ்தை பெற்றுள்ள நிலையில், புதுச்சேரிக்கு முழு மாநில அந்தஸ்து பெற்றுத் தந்திட, திமுக முயற்சிகள் அனைத்தையும் மேற்கொள்ளும்.

# மொழிக் கொள்கை (Language Policy)

## தமிழ் ஆட்சி மொழி (Tamil as an Official Language)

நம் தாய் மொழியாம் செம்மொழித் தமிழ் மொழியைக் காத்திடவும், இந்தித் திணிப்பு–மொழி ஏகாதிபத்தியம் எந்த வடிவத்தில் வந்தாலும் அதை எதிர்த்திடவும், அதற்காக எண்ணிலடங்கா இழப்புகளை ஏற்றுக் கொண்டுள்ளதோடு தொடர்ந்து அவ்வழியில் தி.மு.கழகம் உறுதியுடன் பணியாற்றி வருகிறது.

இந்தி பேசாத மக்கள் விரும்புகின்ற காலம் வரை, ஒன்றிய ஆட்சி மொழியாக ஆங்கிலமே நீடிக்கும் என்றும், பிறமொழி பேசும் மக்கள் மீது இந்தி திணிக்கப்படமாட்டாது என்றும் அப்போதைய பிரதமர் பண்டித நேரு அவர்கள் வழங்கிய வாக்குறுதி எப்பொழுதும் காப்பாற்றப்பட வேண்டும் என்பதைத் திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

தமிழ்மொழியை ஒன்றிய ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஆக்க வேண்டுமென்று, 1996 ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக மாநில மாநாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஒன்றியத்தில் அமையும் புதிய ஆட்சி நடைமுறைப்படுத்தும்.

அதுவரை, ஒன்றிய அரசுப் பணிகளுக்கும், ஒன்றியப் பணியாளர் தேர்வு வாரியம் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் நடைபெறும் பணியாளர் தேர்வுகளுக்கும், தமிழ் உள்ளிட்ட அந்தந்த மாநிலங்களின் ஆட்சி மொழிகளாக உள்ள மொழிகளையும், இணைத்து எழுத்து மற்றும் நேர்முகத் தேர்வுகளை நடத்துவதற்குப் புதிய அரசு ஆவன செய்யும்.

## ஒன்றிய அரசு அலுவலகங்களில் தமிழ் ஆட்சி மொழி:

செம்மொழியான தமிழ், தமிழ்நாட்டில் உள்ள ஒன்றிய அரசு அலுவலகங்களில் இணை ஆட்சி மொழியாகப் (Co-Official Language) பிரகடனப்படுத்தப்பட்டு, தமிழ்நாட்டில் உள்ள ஒன்றிய அரசு அலுவலகங்கள், நிறுவனங்கள், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் அனைத்தும் தமிழிலும் செயல்பட வேண்டுமென்றும், இதற்காக இந்திய அரசிலமைப்புச் சட்டம் 343 ஆவது பிரிவில் உரிய சட்டதிருத்தம் கொண்டுவரவும் புதிய அரசு நடவடிக்கை எடுக்கும்.

## தமிழ் உட்பட அனைத்து மாநில மொழிகளுக்கும் சமஅளவு நிதி:

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் 8வது அட்டவணையில் இந்தியாவில் உள்ள மொழிகள் அனைத்திற்கும் சம உரிமைகள் வழங்கப்பட வேண்டும். ஆனால் ஒன்றிய அரசின் 2023-2024 நிதிநிலை அறிக்கையில் இந்தி மொழி வளர்ச்சிக்கு ரூ.1487 கோடியும், தமிழ் மொழிக்கு ரூ.74 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது அநீதியாகும். இந்தியா கூட்டணி ஆட்சி அமையும்போது அனைத்து மாநில மொழிகளின் வளர்ச்சிக்கும் சமஅளவு நிதி ஒதுக்கப்படும்.

## சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழ் வழக்காடு மொழி:

இந்திய ஆட்சி மொழிச்சட்டம் 1963, பிரிவு-7ன் படி, இந்தி அல்லது மாநிலங்களின் ஆட்சி மொழிகள் மாநில உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகளில் மற்றும் உத்தரவுகளில் பயன்படுத்தப்படலாம் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி, அதனை ஆளுநர் பரிந்துரையுடன் குடியரசுத் தலைவருக்கு அனுப்பினால், அவர் அதனையேற்று உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்றும் இந்திய ஆட்சிமொழிச் சட்டம் கூறுகிறது.

அதன் அடிப்படையில், கலைஞர் தலைமையிலான தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு சட்டப் பேரவையில் 6-12-2006 அன்று தமிழை உயர்நீதிமன்ற மொழி ஆக்கிட வேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றி, அது சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி, மற்றும் ஆளுநர் ஆகியோரின் பரிந்துரையுடன் ஒன்றிய அரசுக்கு 11-2-2007 அன்று அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால், இதுவரை ஒன்றிய அரசு எந்த முடிவும் எடுக்கவில்லை. எனவே, தமிழ்நாடு சட்டப் பேரவையில்

நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் ஒன்றியத்தில் அமையும் புதிய அரசு, தமிழை, சென்னை உயர்நீதிமன்றத்தின் வழக்காடு மொழியாக ஏற்று ஆணை பிறப்பிக்கும்.

## தமிழ் வளர்ச்சி - செம்மொழி:

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெருமுயற்சியால் சென்னையில் அமைக்கப் பெற்ற செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் (Central Institute of Classical Tamil, Chennai) தன்னாட்சி பெற்ற அமைப்பாகத் தொடர்ந்து மேலும் செம்மையுடன் செயல்படும்.

ஒன்றியத்தில் புதிய அரசு ஏற்பாட்டில் செம்மொழித் தமிழுக்கு மேலும் சிறப்புச் சேர்க்கும் வகையில் உலகப் பொது மறையான திருக்குறள் தேசிய நூலாக அறிவிக்கப்பட புதிய அரசு ஆவன செய்யும்.

## தாயகம் திரும்பிய தமிழர் குடியுரிமை:

இலங்கையிலிருந்து இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்டு தமிழகத்தில் தஞ்சம் அடைந்த தமிழர்களும், அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள 1964 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சாஸ்திரி - சிறீமாவோ பண்டார நாயகா இந்திய - இலங்கை ஒப்பந்த அடிப்படையில் நாடு திரும்பியவர்களாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய - இந்திய வம்சாவழியினரான மலையகத் தமிழர்களும், அவர்களது குழந்தைகளும் இந்தியக் குடியுரிமை பெறுவதற்கு வழிவகை செய்யப்படும்.

மேலும், ஏறத்தாழ 35 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கைத் தமிழர்கள் முகாம்களில் தங்க அனுமதி வழங்கப்பட்டுள்ள ஈழத்தமிழ் உறவுகளுக்கு இந்தியக் குடியுரிமை வழங்குவதற்கும், புதிய ஒன்றிய அரசு மூலம் ஆவன செய்யப்படும். அத்துடன் இவர்களில் இலங்கைக்குத் திரும்பிச் செல்ல விரும்புபவர்களுக்கு வேண்டிய அனைத்து உதவிகளும் செய்யப்படும்.

# சேதுசமுத்திரத் திட்டம்

தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தி வேலைவாய்ப்புகளைப் பெருமளவு உருவாக்கக் கூடிய தமிழ்நாட்டு மக்களின் 150 ஆண்டு காலக் கனவுத்திட்டம் – பெருந்தலைவர் காமராசரும்,

பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும் நீண்ட காலமாகப் போராடி வந்த மாபெரும் திட்டம் சேதுசமுத்திரத் திட்டம். இத்திட்டம், ஏறத்தாழ 2427 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2.7.2005 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு கணிசமான பணிகள் முடிவடைந்த நிலையில் பிற்போக்குச் சக்திகளால் முடக்கப்பட்டுள்ளது.

சேதுசமுத்திரத் திட்டம் முழுமையாக நிறைவேறவும், தென் தமிழ்நாடு பொருளாதார வளர்ச்சி பெறவும், இந்திய நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்யவும் ஒன்றியத்தில் அமையும் புதிய ஆட்சி உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

## ஒன்றிய அரசின் முகமைகள்

உச்ச நீதிமன்றம், ஒன்றிய தலைமைக் கணக்காயர், ஒன்றிய புலனாய்வுத்துறை, ரிசர்வ் வங்கி, பல்கலைக் கழக மானியக் குழு, இந்திய மருத்துவக் குழு, தேர்தல் ஆணையம், ஒன்றிய அரசின் கல்வி வாரியங்கள், அனைத்திந்தியத் தொழில் நுட்பக் குழு போன்ற பல்வேறு முக்கிய அமைப்புகள் சுயாட்சியுடன் செயல்பட்ட நிலைக்கு இன்று பா.ஜ.க. ஆட்சியில் பேராபத்து நேர்ந்துள்ளது. ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு, மேற்கண்ட அரசியலமைப்பு நிறுவனங்கள் எவ்வித அரசியல் தலையீடு இன்றியும், தன்னிச்சையாகவும் செயல்படுவது உறுதி செய்யப்படும்.

## பா.ஜ.க. அரசின் வாய் ஜாலங்கள்

### எய்ம்ஸ் மருத்துவமனை

2021 இல் ஆட்சிப் பொறுப்பேற்று நாம் அறிவித்த கலைஞர் நூற்றாண்டு அரசு உயர் சிறப்பு மருத்துவமனையை ஓராண்டுக்குள் கட்டிமுடித்துத் திறந்து வைத்துள்ளோம். நாம் சொன்னதைச் செய்பவர்கள். பா.ஜ.க வினர் சொன்னதைச் செய்வதில்லை என்பதற்கு எய்ம்ஸ் மருத்துவமனையே சாட்சி.

அதேபோல, பா.ஜ.க. அரசு சொன்னதைச் செய்யவில்லை என்பதற்கு மேலும் சில சான்றுகள்:

❖ 2014 நாடாளுமன்றத் தேர்தலின்போது மோடி அறிவித்ததில் எதுவும் செயல்படுத்தப்படவில்லை.

1. இராமநாதபுரம் பிரச்சாரக் கூட்டத்தில் தமிழக மீனவர்களுக்கு இலங்கையால் பிரச்சினை - குஜராத் மீனவர்களுக்கு பாகிஸ்தானால் பிரச்சனை – இரண்டையும் தீர்க்க ஒரு குழுவை அமைப்போம் என்றார்; அமைக்கவில்லை.

2. உலக நாடுகளில் பதுக்கிவைக்கப்பட்டுள்ள கருப்புப் பணத்தைக் கொண்டு வந்து வங்கிகளில் உள்ள இந்தியர் ஒவ்வொருவர் கணக்கிலும் தலா 15 லட்சம் ரூபாய் போடுவேன் என்றார். செய்யவில்லை.

3. மீனவர்களுக்கு சேட்டிலைட் வசதி செய்து கொடுப்போம்; இதன் மூலம் எங்கு மீன் அதிகம் கிடைக்கிறது என்று சொல்வோம். அந்த வசதியை மீனவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றார். அந்த சேட்டிலைட் வசதியைச் செய்து கொடுக்கவில்லை.

4. இப்போது தமிழக மீனவர்களை இலங்கை அரசு தாக்குகிறது, ஏனென்றால் இந்தியாவில் பலவீனமானவர் பிரதமராக இருக்கிறார் என்னைப்போல் துணிச்சலான இரும்பு மனிதராக ஒரு பிரதமர் வந்தால் தமிழக மீனவர்மீது இலங்கைத் தாக்குதல் நடத்தாது என்றார் மோடி. இதையும் இராமநாதபுரத்தில் தான் கூறினார் மோடி. இப்போது முன்பைவிட அதிகமாகத் தான் இலங்கையின் தாக்குதல் நடக்கிறது.

5. தேர்தல் பிரச்சாரத்திற்கு 2014 - இல் ஈரோடு வந்த மோடி –பா.ஜ.க ஆட்சிக்கு வந்ததும் – மஞ்சள் விவசாயிகளின் வாழ்க்கையைப் பிரகாசம் அடையச் செய்வேன் என்றார்; நடைபெறவில்லை.

6. அதன்பின் திருப்பூருக்குச் சென்ற மோடி அங்கே சாயப்பட்டறை, சூளைக் கழிவுகள் மட்டும்தான் பிரச்சினை – எனவே பொதுச் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து விடலாம்; ஜவுளித் தொழில் வளம்பெறும் – என்றார், அதன்படி பொதுச் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படவில்லை.

7. அதன்பின் சேலம் சென்றார். அங்கே சேலம் உருக்காலையை நவீனப்படுத்துவோம் என்றார்; நவீனமயமாகவில்லை.

8. அங்கு, மரவள்ளிக் கிழங்கு உற்பத்தி செய்யும் விவசாயிகளின் வாழ்க்கையை வளமாக்குவேன் என்றார். வளமாக்கவில்லை.

9. விவசாயிகளுக்கு அவர்களின் பொருள்களைச் சந்தைப்படுத்துவதற்கான சிறப்பு வசதிகளைச் செய்து கொடுப்பேன் என்றார். செய்யவில்லை.

10. அடுத்து கிருஷ்ணகிரிக்கு வந்த மோடி இந்தப் பகுதியே வளர்ச்சி குன்றியது. பின் தங்கிய இந்தப் பகுதியை முன்னேற்றுவேன் என்றார். அதன்படி – கிருஷ்ணகிரிக்காக ஒரு திட்டமும் வரவில்லை.

11. கன்னியாகுமரியில் பேசிய மோடி கன்னியாகுமரியை உலகப்புகழ் பெற்ற சுற்றுலா தலமாக மாற்றுவேன் என்றார். மாற்றுவதற்கு எதையும் செய்யவில்லை.

12. இந்தியாவுக்குள் இருக்கும் கருப்புப் பணம் ஏறத்தாழ 5 லட்சம் கோடி ரூபாயைக் கண்டு பிடிக்கப்போகிறேன் எனச் சொல்லி 500 ரூபாய் 1000 ரூபாய் நோட்டுகளைச் செல்லாது என அறிவித்து – வங்கிமுன் பல மணி நேரம் வரிசையில் நின்று – பலர் இறக்கக் காரணமாகி, பின்னர் 2000 ரூபாய் நோட்டும் செல்லாது என்று அறிவித்திருக்கிறார்.

13. ஆண்டுக்கு 2 கோடி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்றார். வழங்கவில்லை.

## பா.ஜ.க அரசின் ஊழல் சில:

சி.ஏ.ஜி (CAG) அறிக்கையின் மூலம் பா.ஜ.க வின் 7 விதமான ஊழல்கள் வெளிச்சதிற்கு வந்திருக்கின்றன. பாரத் மாலா திட்டம், துவாரகா விரைவுப் பாலம் கட்டுமானத் திட்டம், சுங்கச் சாவடி கட்டணங்கள், ஆயுஷ்மான் பாரத் திட்டம் அயோத்யா மேம்பாட்டுத் திட்டம், கிராமப்புற அமைச்சகத்தின் ஓய்வுத் திட்டம், எச்.ஏ.எல் விமான வடிவமைப்புத் திட்டம் ஆகிய 7 திட்டங்களிலும் பல கோடி ரூபாய் ஊழல் நடைபெற்றுளதாக சி.ஏ.ஜி தெரிவித்திருக்கிறது.

பிரெஞ்சு நாட்டு ரபேல் விமானங்களை வாங்க காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு நிர்ணயித்த விலையை விட 41 சதவீதம் கூடுதலாக விலை நிர்ணயம் செய்து ரபேல் விமானங்களைக் கொள்முதல் செய்ய பா.ஜ.க அரசால் ஆணை வழங்கப்பட்டது.

## தேர்தல் நேர ஏமாற்று வேலை:

வீடுகளில் சமையலுக்குப் பயன்படும் எரிவாயு சிலிண்டர் விலையை 400 என இருந்ததை 1000 ரூபாய் அளவுக்கு உயர்த்திவிட்டு, இப்போது 100 ரூபாய் குறைக்கப்படும் எனத் தேர்தல் நேரத்தில் ஒன்றிய பா.ஜ.க ஆட்சியாளர்கள் அறிவிக்கிறார்கள். இதுவும் ஏமாற்று வேலை தானே.

## மாநிலங்களை அழிக்கும் ஒன்றிய பா.ஜ.க அரசு:

மாநிலங்களின் வளர்ச்சிக்கு மிக முக்கியமானது நிதி. அந்த மாநில வளர்ச்சிக்கான ஆக்ஸிஜனை நிறுத்துவது போல் மாநிலங்களின் நிதி ஆதாரத்தைப் பறித்து, மாநிலங்களை அழிக்க நினைக்கிறது பா.ஜ.க அரசு.

## மெட்ரோ ரயில் திட்ட நிதி:

ஒன்றிய அரசும் தமிழ்நாடு அரசும் இணைந்து 50:50 என்ற விகிதத்தில் தமிழ்நாட்டில் நிறைவேற்றப்படும் இரண்டாம் கட்ட சென்னை மெட்ரோ ரயில் திட்டப் பணிகளுக்கு இதுவரை ஒன்றிய அரசு நிதி வழங்கவில்லை. மேலும் திட்டத்திற்கு அனுமதி வழங்கும் கருத்துரு ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாக ஒன்றிய அமைச்சரவைக் கூட்டத்தில் வைக்கப்படாமல் தேங்கிக்கிடக்கிறது. இந்த ஆண்டில் மேலும் 12,000 கோடி ரூபாயை தமிழ்நாடு அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழ்நாட்டிற்கு முறையாக நிதிவழங்காமல், வளர்ச்சியைத் தடுக்கிறது பா.ஜ.க அரசு.

## அடிப்படை மனிதாபிமானம் கூட இல்லாத பா.ஜ.க அரசு:

2023 டிசம்பர் 2, 3 தேதிகளில் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய 4 மாவட்டங்களையும் மிக்ஜாம் புயலும் மழையும் தாக்கி மாபெரும் சேதத்தை ஏற்படுத்தி மக்களை அல்லல்படுத்தியது.

அதேபோல, டிசம்பர் 17, 18 தேதிகளில் தூத்துக்குடி, நெல்லை, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய 4 மாவட்டங்களும் கடும் மழையால் பாதிக்கப்பட்டு அப்பகுதி மக்கள் பேரழிவைச் சந்தித்தனர். அப்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் அளித்து, வேண்டிய நிவாரண உதவிகளைச் செய்து, அதிகம் பாதித்த குடும்பங்களுக்கு ரூ.6000 வீதமும், குறைந்த பாதிப்புகளுக்கு ஆளான குடும்பங்களுக்கு ரூ.1000 வீதமும், நிவாரண உதவிகளை வழங்கி, மனித உயிரிழப்பு, கால்நடைகள் இழப்பு, பயிர்ச் சேதங்கள் என அனைத்திற்கும் நிவாரணத்தொகைகளை உயர்த்தி வழங்கியது திராவிட மாடல் அரசு.

மாண்புமிகு.முதலமைச்சர் அவர்கள் 19-12-2023 அன்று புதுடெல்லி சென்று பிரதமர் அவர்களைச் சந்தித்து, மழை வெள்ள நிவாரண உதவிகள் வழங்குமாறு கேட்டுக் கொண்டார். சென்னைக்கு ஒன்றியப் பாதுகாப்புத் துறை அமைச்சர்

திரு.ராஜ்நாத்சிங், தூத்துக்குடி பகுதிக்கு ஒன்றிய நிதியமைச்சர் திருமதி.நிர்மலா சீதாராமன் ஆகியோரும், சென்னைப் பகுதி, தூத்துக்குடி பகுதி இரண்டிற்கும் ஒன்றிய அரசின் குழுக்களும் வருகை தந்து பார்வையிட்டு ஒன்றிய அரசு மூலம் விரைந்து நிதி வழங்கிட ஆவன செய்யப்படும் என அறிவித்துச் சென்ற பிறகும் இதுவரை மழை வெள்ள நிவாரணமாக ஒரு பைசா கூட தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசினால் வழங்கப்படவில்லை.

மழை வெள்ளச் சேதங்களுக்கும், சாலை முதலான கட்டமைப்புகளுக்கும் ஏற்பட்ட பாதிப்புகளைச் சரிசெய்திட ரூ.37,000 கோடி நிவாரண நிதியாக வழங்கிட வேண்டுமெனக் கோரிக்கையை மாண்புமிகு.முதலமைச்சர் அவர்கள் கடிதத்தின் மூலம் பிரதமருக்கு அனுப்பினார்கள். எந்தக் கோரிக்கைக்கும் செவி சாய்க்காத பிரதமர் அவர்கள் வெள்ளம் பாதித்த பகுதிகளைக் கூட வந்து பார்க்கவில்லை. இதற்கு நேர்மாறாக பா.ஜ.க ஆளும் மாநிலங்களான குஜராத், உத்தரகாண்ட், போன்ற மாநிலங்களுக்கு உடனுக்குடன் தேசிய பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து ஒன்றிய அரசு வாரி வழங்கியுள்ளது.

## ஜம்மு காஷ்மீர் மாநில அந்தஸ்து ரத்து:

ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்குச் சிறப்பு அந்தஸ்து வழங்கும் அரசியல் சட்டம் 370 வது பிரிவு ரத்து செய்யப்பட்டது. தனிமாநிலம் என்பதும் பறிக்கப்பட்டு காஷ்மீர், ஜம்மு இரண்டும் ஒன்றிய அரசின் நிர்வாகத்திற்குட்ட இரண்டு பகுதிகளாக அறிவிக்கப்பட்டன. மாநில உரிமைகளைப் பறித்து மாநிலங்கள் என்ற அமைப்பையே சிதைக்க நினைக்கிறது பா.ஜ.க அரசு.

## புதிய கல்விக் கொள்கை:

2020 ஆம் ஆண்டில் புகுத்தப்பட்ட புதிய கல்விக் கொள்கை வேற்றுமையில் ஒற்றுமை என்னும் அடிப்படைக் கோட்பாட்டிற்கு எதிரானது; இந்திய மக்களின் சுதந்திரத்தை நசுக்குவதாகும். புதிய கல்விக் கொள்கை மூலம் இந்தியையும், சமஸ்கிருதத்தையும் புகுத்துவது தேசிய ஒருமைப்பாட்டிற்கு அச்சுறுத்தலாகும். ஆகையால், தி.மு.க. புதிய கல்விக் கொள்கையை எதிர்ப்பதுடன், அதனை ரத்து செய்திட ஆவன செய்யும்.

## ரயில்வே- தனி நிதிநிலை அறிக்கை:

2017 முதல் ஒன்றிய அரசு ரயில்வே துறைக்குத் தனி நிதிநிலை அறிக்கை அளிக்கப்படுவதை ரத்து செய்து, பொது நிதிநிலை அறிக்கையில் இணைத்துவிட்டது. புதிய அரசு ரயில்வேக்கு தனி நிதிநிலை அளிக்க வகை செய்யும். வந்தேபாரத் போன்ற அதிவேக ரயில்கள் அறிமுகப் படுத்தப்பட்டபின் ரயில்கட்டணம் பலமடங்கு உயர்ந்து நடுத்தர, ஏழை எளியவர்கள் அந்தப் புதிய ரயில்களில் பயணம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. உறங்கும் வசதிகொண்ட ரயில் பெட்டிகளில் ஏ.சி.பொருத்தப்பட்டு ரயில் பயணக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. மூத்த குடிமக்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகள் ரத்து செய்யப்பட்டதால், ரயிலில் பயணம் செய்யும் நோயாளிகள் மற்றும் முதியோர்கள் அதிகம் சிரமப்படுகின்றனர். எனவே சிறப்பாகச் செயல்படவும், நிர்வாக வசதிக்காகவும், ரயில்வே நிர்வாகம் படிப்படியாக மாநிலங்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். மக்கள் தொகை அதிகரிப்பு, புதிய நகரங்கள் உருவாவதன் காரணமாக, எதிர்காலத்தில் மெட்ரோ ரயில்கள் மற்றும் ரயில்வே இடையே ஒருங்கிணைப்பு ஏற்பட வசதியாயிருக்கும்.

## இடஒதுக்கீடு:

நாடாளுமன்றத்தில் பெண்களுக்கான 33 சதவீத இடஒதுக்கீடு உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

தற்போதைய இட ஒதுக்கீடுகள் ஒன்றிய அரசில் இதர பிற்படுத்த பட்டவர்க்கு எதிலும் கடைப்பிடிக்கப்படாமையால் அதன் நோக்கம் நிறைவேறவில்லை. உயர்கல்வி நிறுவனங்களில் உயர்வகுப்பு ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் பட்டியல் இன, மலைவாழ் இன, இதர பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் துன்புறுத்தப்படுவதாகப் பல்வேறு குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இதர பிற்படுத்தப்பட்ட, பட்டியலின மாணவர்களுக்கான இட ஒதுக்கீடுகள் முறையாக அந்நிறுவனங்களில் பின்பற்றப்படுகின்றனவா என்பதைக் கண்டறிந்து ஆலோசனைகள் வழங்கி மாநில அளவிலான கல்விக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அதன்மூலம் கண்காணிக்கப்படும்.

## ஒன்றிய அரசில் பங்கேற்று தமிழ்நாட்டின் வளம்பெருக்கிய தி.மு.கழகம்:

1990 ஆம் ஆண்டு தேசிய முன்னணி ஆட்சியிலேதான், தலைவர் கலைஞர் அவர்கள் வலியுறுத்தியதன் காரணமாக, சமூக நீதிக் காவலர், திரு.வி.பி. சிங் அவர்களால் மண்டல் பரிந்துரை ஏற்கப்பட்டு, ஒன்றிய அரசின் வேலை வாய்ப்புகளில் 27 சதவீத இடஒதுக்கீடு கிடைத்தது; காவிரி நதி நீர் பிரச்சினைக்கு நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது; மாநிலங்களிடை மன்றமும் (Inter-State Council) அப்போதுதான் உருவானது. சென்னை விமான நிலையத்தில் பன்னாட்டு முனையத்திற்கு அறிஞர் அண்ணா அவர்களின் திருப்பெயரும், உள்நாட்டு முனையத்திற்கு பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் திருப்பெயரும் சூட்டப்பட்டன.

அதனைத் தொடர்ந்து 1996ல் ஐக்கிய முன்னணி அரசிலும் 1999ல் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசிலும் தி.மு. கழகம் பங்கு பெற்று, ஒன்றியத்தில் நிலையான ஆட்சியை நிறுவுவதற்கும், கழகத்தின் அடிப்படைக் கொள்கைகளான சமத்துவம், சமூக நீதி, மத நல்லிணக்கம், மாநில சுயாட்சி, மொழி உரிமை, வறுமை ஒழிப்பு, பொருளாதார முன்னேற்றம் ஆகியவற்றுக்காகத் தொடர்ந்து பாடுபட்டு வந்திருக்கின்றது.

காங்கிரஸ் கட்சியின் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் 2004 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை அமைச்சரவையிலும் இடம் பெற்று தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும் மேம்பட்டுக்கும் கழகம் ஆற்றியுள்ள பணிகள் குறிப்பிடத்தக்கவை.

ஒன்றிய தொழில் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சராகப் பணியாற்றிய முரசொலி மாறன் அவர்கள் தோகாவில் நடைபெற்ற உலக வர்த்தக அமைப்பின் கூட்டத்தில், இந்திய வேளாண்மையைப் பாதுகாக்க பல மணி நேரம் தன்னுடைய கருத்துகளை விரிவாக எடுத்துவைத்த பாங்கினை உலக நாடுகளே பாராட்டின.

இந்தியாவின் பொதுத்துறை நிறுவனங்களை அவற்றின் செயல்பாடுகளின் அடிப்படையில் தரம் பிரித்து, மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வந்த நிறுவனங்களை 'நவரத்னா' என்று அறிவித்ததோடு, ஏனைய பொதுத்துறை நிறுவனங்களின் செயல் திறனை மேம்படுத்த அவர் மேற்கொண்ட முயற்சிகள் பெரிதும் பாராட்டைப் பெற்றவையாகும்.

உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவான அறிவுசார் சொத்துரிமை வாரியத்தின் தலைமை அலுவலகத்தைச் சென்னையில் நிறுவச் செய்த பெருமையும் அவரையே சாரும்.

2004 ஆம் ஆண்டு தொடங்கி ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த கழக அமைச்சர்களின் முயற்சியால் பல்வேறு வகைகளில் தமிழ்நாடு நன்மை அடைந்திருக்கிறது.

- தமிழ், செம்மொழி என்ற பிரகடனம்; சென்னையில் செம்மொழித் தமிழாய்வு மத்திய அரசு நிறுவனம்.
- 2427 கோடி ரூபாய்ச் செலவில் சேது சமுத்திரத் திட்டம்.
- கப்பல் மற்றும் நெடுஞ்சாலைத் துறை மூலம் 56 ஆயிரத்து 664 கோடியே 21 இலட்சம் ரூபாய் செலவில்- 4 ஆயிரத்து 676 கிலோமீட்டர் நீள தேசிய நெடுஞ்சாலைகளில் 3 ஆயிரத்து 276 கிலோ மீட்டர் சாலைகள் நான்கு வழிச் சாலைகளாக மேம்பாடு, மிகப் பிரம்மாண்டமான போக்குவரத்து மேம்பாலங்கள், துறைமுக விரிவாக்கப் பணிகள், சரக்குப் பெட்டக முனையங்கள், நீர்வழிப் போக்குவரத்து வசதிகள்.
- சென்னைக்கருகில் ஒரகடத்தில் 470 கோடி ரூபாய் முதலீட்டில் ஒன்றிய அரசின் தேசிய மோட்டார் வாகனச் சோதனை மற்றும் ஆராய்ச்சி உள்ளிட்ட வளர்ச்சிக் கட்டமைப்பு மையம்.
- 1553 கோடி ரூபாய்ச் செலவில் சேலம் உருட்டாலை சர்வதேசத் தர அளவுக்கு உயர்த்தப்பட்டு, புதிய குளிர் உருட்டாலை உருவாக்கம்.
- தாம்பரத்தில் தேசிய சித்த மருத்துவ ஆய்வு மையம்.
- சேலத்தில் புதிய ரயில்வே மண்டலம்
- 120 கோடி ரூபாய்ச் செலவில் சேலம் அரசினர் மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி "சூப்பர் ஸ்பெஷாலிட்டி" மருத்துவக் கல்லூரியாக மேம்பாடு.
- 1650 கோடி ரூபாய்ச் செலவில் சென்னை துறைமுகம் – மதுரவாயல் இடையே பறக்கும் சாலைத் திட்டம் தொடக்கம்.

- 640 கோடி ரூபாய்ச் செலவில் சென்னை துறைமுகத்தையும் எண்ணூர் துறைமுகத்தையும் இணைக்கும் சாலையை அகலப்படுத்தும் திட்டம்.
- 908 கோடி ரூபாய்ச் செலவில் நெம்மேலியில் கடல் நீரைக் குடிநீராக்கும் மற்றொரு திட்டம். தமிழ்நாட்டிலுள்ள மீட்டர்கேஜ் இரயில் பாதைகள் அனைத்தையும் அகல இரயில் பாதைகளாக மாற்றிட அனுமதி.
- 1828 கோடி ரூபாய்ச் செலவில் தமிழகத்தில் 90 இரயில்வே மேம்பாலங்கள் கட்டுவதற்கு அனுமதி.
- சென்னை மாநகரில் மெட்ரோ இரயில் திட்டம்.
- ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- திருச்சி, கோவை, மதுரை விமான நிலையங்கள் விரிவாக்கம்.
- சென்னைக்கருகில் 244 கோடி ரூபாய்ச் செலவில் பன்னாட்டுத் தரம் வாய்ந்த கடல் சார் தேசியப் பல்கலைக்கழகம்,
- திருவாரூரில் மத்திய அரசின் பல்கலைக் கழகம்.
- திருச்சியில் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம்.
- ஆசியாவிலேயே முதலாவதாக சென்னைக்கு அருகில் மாற்றுத் திறனாளிகளுக்கு தேசிய மையம்.
- சென்னையில் ஒன்றிய அதிரடிப்படை மையம். (என்.எஸ்.ஜி)
- தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புச் சட்டத்தின் கீழ் 100 நாள்களுக்கு வேலை வாய்ப்பு.
- நெசவாளர் சமுதாயம் பெரும்பயன் எய்திட “சென்வாட் வரி” நீக்கம்.
- பொடா சட்டம் ரத்து
- இந்தியாவிலேயே முதன் முறையாக வளர்ந்த நாடுகளுக்கு இணையான மூன்றாம் தலைமுறை தகவல் தொழில் நுட்பத் திட்டம் (3ஜி)
- அனைத்துக் கிராமங்களிலும் முழு கணினி நிர்வாகத்தை ஏற்படுத்தும் வகையில் தேசிய கணினி நிர்வாகத் திட்டம் அறிமுகம்; (National E- Governance Program)

- 50 காசு செலவில் இந்தியா முழுவதும் தொலைபேசியில் பேசும் வசதி.
- ஒன்றிய அரசு கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 27 சதவீத இட ஒதுக்கீடு.
- இந்தியா முழுவதும் விவசாயிகள் கூட்டுறவு அமைப்புகளில், வங்கியில் பெற்றிருந்த ரூ. 72,000 கோடி மதிப்பிலான கடனும் வட்டியும் ஒன்றிய அரசால் தள்ளுபடி செய்யப்பட்டது.
- இந்தியா முழுவதும் மாணவர்களுக்குப் பல நூறு கோடி ரூபாய் கல்விக் கடன்.
- இந்திய அஞ்சல் துறையை நவீன மயமாக்கி, பல்நோக்குப் பயன்பாட்டோடு 15,000 அஞ்சல் நிலையங்களில் மேம்படுத்தப்பட்ட "அம்புத் திட்டம்" (Project Arrow). தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் கீழ் 300 அஞ்சல் நிலையங்கள் மேம்படுத்தப்பட்டன.

இத்தகைய சாதனைத் திட்டங்கள்போல் கடந்த 10 ஆண்டுகளில் (2014-2024) தமிழ்நாட்டில் உருப்படியான ஒரு திட்டம்கூட பா.ஜ.க. அரசினால் நிறைவேற்றப்படவில்லை.

எனவே யாருக்கும் நன்மை இல்லாத பாசிச மதவெறி ஒன்றையே கருவியாகக் கொண்டு நாட்டை அழிவுப்பாதைக்கு அழைத்துச் சென்றுள்ள பா.ஜ.க. ஆட்சியை அகற்றி – 'இந்தியா கூட்டணி' ஆட்சியை நிறுவிட சபதம் ஏற்போம்.

## தமிழ்நாடு உட்பட இந்தியா முழுவதும் உள்ள மக்களின் பேராதரவுடன் ஒன்றியத்தில் 'இந்தியா' கூட்டணி அரசு நிறுவப்பட்டபின் நிறைவேற்றப்படவுள்ள திட்டங்கள்

1. இந்தியா முழுவதும் விவசாயிகள் கூட்டுறவு அமைப்புகளில், வங்கிகளில் பெற்றிருக்கும் கடனும் வட்டியும் ஒன்றிய அரசால் தள்ளுபடி செய்யப்படும்.
2. மாணவர்களின் கல்விக்கடன் முற்றிலும் தள்ளுபடி செய்யப்படும்.
3. அனைத்து மாநில மகளிருக்கும் மாதம் ரூபாய் 1000 உரிமைத் தொகை வழங்கப்படும்.
4. மாநில முதலமைச்சர்களைக் கொண்ட மாநில வளர்ச்சிக்குழு அமைக்கப்படும்.

5. பா.ஜ.க அரசால் கலைக்கப்பட்ட ஒன்றிய திட்டக் குழு மீண்டும் அமைக்கப்பட்டு நாடு முழுமையிலும், மாநில அரசுகளின் கோரிக்கையின் அடிப்படையில் திட்டங்கள் வகுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். தற்போதுள்ள நிதி ஆயோக் கலைக்கப்படும்.

6. தமிழ்நாட்டுக்கு நீட் தேர்விலிருந்து விலக்கு அளிக்கப்படும்

7. தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள சுங்கச்சாவடிகள் முற்றிலுமாக அகற்றப்படும்.

8. தொழில் மையங்கள் அமைந்துள்ள பகுதிகளில் உள்ள சாலைகள் மற்றும் இணைப்புச் சாலைகள் கான்கிரீட் சாலைகளாக விரிவுபடுத்தப்பட்டு, போக்குவரத்தில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும்.

9. பல்கலைக்கழகங்களில் ஆளுநர்களால் நியமிக்கப்படும் துணைவேந்தர்கள் நியமனத்தை, இனி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசாங்கமே மேற்கொள்ளும்வகையில் சட்டத் திருத்தம் கொண்டு வரப்படும்.

10. 'குடியுரிமைத் திருத்தச் சட்டம்' (CAA-2019) ரத்து செய்யப்படும்.

11. கல்லூரி மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் ஒரு ஜி.பி.அளவில் கட்டணமற்ற 'இலவச சிம் கார்டு' வழங்கப்படும்.

12. மாநிலங்களில் உள்ள ஒன்றிய அரசின் உயர்கல்வி நிறுவனங்களில் அந்தந்த மாநிலத்தைச் சார்ந்த மாணவர்களுக்கு 50 சதவிகித இடஒதுக்கீடு வழங்கப்படும்.

13. வங்கிக் கணக்கில் குறைந்தபட்ச இருப்புத் தொகை இல்லாதபோது விதிக்கப்படும் அபராதம் நீக்கப்படும்.

14. ஒன்றிய திட்டக் குழுவைப் போல, ஒன்றிய நிதிக் குழுவும் நிரந்தர குழுவாக அமைக்கப்படும்.

15. வசூலிக்கப்படும் கூடுதல் வரி செலவிடப்படும் முறை வெளிப்படைத் தன்மையுடன் இருப்பது உறுதி செய்யப்படும்.

16. கண்காணிப்பு அமைப்புகளின் நியமனங்கள் ஒரு நியமனக் குழுவால் நியமிக்கப்படுவர். இக்குழுவில் 50 சதவிகித உறுப்பினர்கள் பல்வேறு மாநிலங்களின் பிரதிநிதிகளாக இருக்க வேண்டும்.

17. அனைத்து கடற்கரைப் பகுதிகளிலும் கடல்நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ஒன்றிய அரசால் நிறுவப்பட்டு, தரமான குடிநீர் வழங்குவது உறுதி செய்யப்படும்.

18. அந்நிய ஆக்கிரமிப்புத் தாவரங்களைக் களையெடுக்க நிதியுதவி செய்ய ஒன்றிய அளவில் நிதியம் ஒன்று உருவாக்கபடும்.

19. மாநிலம் முழுதும் அனைத்து இடங்களிலும் இலவச WIFI சேவை வழங்கப்படும்.

20. ஏழை எளிய நடுத்தர மக்களும் விமானப் போக்குவரத்தைப் பயன்படுத்த உதவும் வண்ணம் விமானக் கட்டணம் நிர்ணயிக்கப்படும்.

21. இந்தியாவில் உள்ள இரண்டாம் மற்றும் மூன்றாம் தர நகரங்களில் ஸ்மார்ட் சிட்டி திட்டம் செயல்படுத்தப்படும்.

22. இந்தியாவில் உள்ள முக்கிய புனிதத் தலங்களுக்குப் பயணிகள் வர வசதியாக அந்தந்த ஊர்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தி சுற்றுலாத் திட்டம் செயல்படுத்தப்படும்.

23. இந்தியாவில் ராபர்ட் கால்டுவெல் (Robert Caldwell) மொழி ஆராய்ச்சி மையம் உருவாக்கப்படும்.

24. இந்தியாவில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் தமிழ் இருக்கைகள் ஏற்படுத்தப்படும்.

25. பணி ஓய்வு பெற்ற நீதிபதிகள் மற்றும் ஒன்றிய அரசில் பணியாற்றிய செயலாளர்கள் உள்ளிட்டோர் தனியார் நிறுவனங்கள் மற்றும் அரசியல் கட்சிகளில் இணைய 2 ஆண்டுகள் காத்திருப்புக் காலமாக அறிவித்து புதிய சட்ட திருத்தம் கொண்டு வரப்படும்.

26. இந்தியாவில் வாழும் ஈழத் தமிழர்கள் குடியுரிமை பெற வழிவகுக்கப்படும்.

27. கச்சத்தீவு மீட்பு: கச்சத்தீவில் இருந்து சுமார் 200 கி.மீ தொலைவில், குலசேகரபட்டினம் ராக்கெட் ஏவுதளம் அமைந்திருப்பதால், இந்தியாவின் பாதுகாப்பை உறுதி செய்திடவும் மீனவர்களின் நலன் காக்கப்படவும், கச்சத்தீவை மீட்க வழிவகை செய்யப்படும்.

28. இரண்டாகப் பிரிக்கப்பட்ட ஜம்மு காஷ்மீருக்கு மாநில அந்தஸ்து மீண்டும் வழங்கப்படும். அந்த மாநில சட்டமன்றத்திற்கு உடனடியாக ஜனநாயக முறையில் தேர்தல் நடத்தப்படும்.

29. மேலும், காஷ்மீர் மக்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்படும்.

30. இந்திய அரசமைப்புச் சட்ட முகப்புரையில் கூறப்பட்டுள்ள மதச்சார்பற்ற தன்மை நிலைநாட்டப்பட பொது சிவில் சட்டம் கொண்டுவரப்படாமல் கடுமையாகத் தடுக்கப்படும்.

31. யுபிஎஸ்சி தேர்வு கமிட்டியில் அனைத்து மாநிலங்களுக்கும் பிரதிநிதித்துவம் வழங்கும் வகையில் குழு அமைக்கப்படும்.

32. இந்தியாவில் எமர்ஜென்ஸி காலகட்டத்தில் கல்வி மற்றும் சுகாதாரம் மாநில பட்டியலில் இருந்து, பொதுப் பட்டியலுக்கு (Concurrent List) மாற்றப்பட்டன. அவை மீண்டும் மாநிலப் பட்டியலுக்கு மாற்றம் செய்யப்படும்.

33. கடந்த 10 ஆண்டுகளில் ஒன்றிய பாஜக அரசு கொண்டு வந்த அனைத்து மக்கள் விரோதச் சட்டங்களும் இந்தியா கூட்டணி அரசு பொறுப்பேற்ற உடன் மறுபரிசீலனை செய்யப்படும்.

34. மாநிலக் கல்வி நிறுவனங்களின் மீது திணிக்கப்படும் ஒன்றிய அரசின் அனைத்துப் பொதுத் தேர்வுகளும் ரத்து செய்யப்படும்.

35. புதிய தேசிய கல்விக் கொள்கை (NEP) 2020 முற்றிலும் அகற்றப்படும்.

36. ஒரே நாடு ஒரே தேர்தல் என்ற இந்திய அரசின் திட்டம் கைவிடப்படும். மேலும், மக்களவை தொகுதி உறுப்பினர் எண்ணிக்கையில் தற்போதைய நடைமுறையே (1971 மக்கள் தொகை கணக்கெடுப்பு) பின்தொடர ஆவன செய்யப்படும்.

37. நிதிக்குழுவின் அமைப்பு, ஆய்வு விதிகள் ஆகியன மாநிலங்களுக்கான மன்றத்தில் மட்டுமே முடிவு செய்ய வேண்டும் என்று வலியுறுத்தப்படும்.

38. FRBM Act - நிதியியல் பொறுப்பு -வரவு - செலவு மேலாண்மை சட்டத்தில் ஒன்றிய அரசு கொண்டுவந்த புதிய நிபந்தனைகளை நிராகரிக்க வழிவகை செய்யப்படும்.

39. நாடாளுமன்றத்திலும் சட்டமன்றங்களிலும் 33% மகளிர் இட ஒதுக்கீடு உடனடியாகச் செயல்படுத்தப்படும்.

40. கல்வி மற்றும் வேலை வாய்ப்பு உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் சமூக நீதி அடிப்படையில் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு வழங்க வழிவகை செய்யப்படும்.

41. மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வட்டி இல்லாக் கடன் 10 லட்சம் வரை வழங்கப்படும்.

42. மாணவர்களுக்கு வட்டி இல்லாக் கல்விக் கடனாக 4 லட்சம் வரை வழங்கப்படும்.

43. ஒன்றிய அரசின் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகளுக்கு நிதி இரட்டிப்பாக்கப்படும்.

44. பயிர்க் காப்பீட்டிற்கு விவசாயிகள் செலுத்த வேண்டிய பங்குத் தொகையை அரசே செலுத்தும். இத்திட்டம் செங்கரும்பு பயிரிடுவோருக்கும் விரிவாக்கப்படும்.

45. மாணவ- மாணவிகள் நலன் கருதி இந்தியா முழுவதும் நான் முதல்வன்- புதுமைப் பெண் திட்டங்கள் விரிவுபடுத்தப்படும்.

46. தேசிய அளவில் ஆன்லைன் சூதாட்டத் தடைச்சட்டம் கொண்டுவரப்படும்.

47. அதிக மழை வெள்ளத்தால் பாதிக்கப்படும் மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு திட்டம் உருவாக்கப்படும்.

48. தமிழ்நாட்டில் ஒன்றியப் பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்படும்.

49. பெட்ரோல் ரூபாய் 75 க்கும் - டீசல் ரூபாய் 65 க்கும்- கேஸ் ரூபாய் 500 க்கும் வழங்கப்படும்.

50. மேல் வரியை (CESS) மாநிலங்களுக்கும் பகிர்ந்து அளிக்கப் பரிந்துரைக்கப்படும். மாநில அரசிடமிருந்து பெறப்படும் நிதியில் 42% முதல் 50% வரிப் பங்கீடு மாநிலங்களுக்குப் பகிர்ந்து அளிக்க நிதிக் குழுமம் மூலம் பரிந்துரைக்கப்படும்.

51. காவிரி-தாமிரபரணி-வைகை ஒருங்கிணைந்த பாதுகாப்புத் திட்டம் அறிவிக்கப்படும்.

52. MSME-க்கான வருமான வரிச் சட்டம் 43(h) பிரிவு நீக்கப்படும்.

53. சென்னை கோயம்பேடு மெட்ரோ ரயில் நிலையத்திலிருந்து அம்பத்தூர் தொழில்பேட்டை வரை மெட்ரோ ரயில் பாதை அமைக்கப்படும்.

54. பொதுத்துறை நிறுவனங்களிலிருந்து அரசாங்கம் பங்குகளை விலக்கிக் கொள்வது முற்றிலுமாக நிறுத்தப்படும்..

55. வெளிநாடுகளுக்கு வேலைக்குச் செல்லும் இளம்பெண்கள்/ இளைஞர்களுக்குத் தேவையான திறன் மேம்பாடு, மொழி அறிவு, உள்ளூர்ப் பிரச்சனைகளைச் சமாளிக்கும் வழிகாட்டல் ஆகியவற்றை ஒன்றிய அரசே அளிக்கும். நாடு திரும்பும் வெளிநாடுவாழ் இந்தியர்களுக்குத் தேவையான கடனுதவிகள் அளிக்க ஏற்பாடு செய்யப்படும்.

56. மதுரை, திருவரங்கம், தஞ்சை, சிதம்பரம், நாகூர், வேளாங்கண்ணி போன்ற வழிபாட்டுத்தலங்களில் கூடுதலாகச் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் அனைத்து வசதிகளும் உள்ளடக்கிய வகையில் நகர்ப்புறங்கள் மேம்படுத்தப்படும்.

## இளைஞர் நலன்

1. தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் பகுதியில் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளித்திட இஸ்ரோ தொழில்நுட்பப் பூங்கா அமைக்கப்படும்.

2. தமிழ்நாடு அரசின்கீழ் ஏற்படும் கடல் சார்ந்த அரசு வேலை வாய்ப்புகளில் அந்தந்தப் பகுதிகளில் வாழும் பாரம்பரிய, படித்த மீனவர் சமுதாய இளைஞர்களுக்கு 50% இட ஒதுக்கீடு வழங்குவதை உறுதி செய்யும்.

3. அனைத்து ஒன்றிய அரசுத் தேர்வுகளிலும் தமிழை விருப்ப மொழியாக ஏற்க வகை செய்யப்படும்.

4. ஆன்லைன் சூதாட்டத்தைத் தடை செய்யும் சட்டம் இயற்றப்படும்;

5. இந்திய ஒன்றிய அரசின் பொதுத்துறை நிறுவனங்கள், அலுவலகங்கள் ஆகியவற்றில் அந்தந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்பில்

முன்னுரிமை அளிக்கும் வழக்கம் கடைப்பிடிக்கப்பட்டு வந்த நிலையை மாற்றி, ஒன்றிய அரசு கடந்த 10 ஆண்டுகளில், தமிழ்நாட்டில் அமைந்துள்ள அனைத்து ஒன்றிய பொதுத்துறை நிறுவனங்களிலும்,தமிழ்நாட்டு இளைஞர்களின் வேலைவாய்ப்புகளை முற்றிலுமாகப் புறக்கணித்து, பிற மாநிலத்தைச் சேர்ந்தவர்களைத் திணிக்கிறது. தமிழ்நாட்டை வஞ்சிப்பதுடன், பிற மாநிலத்தவருடன் பகையுணர்வை வளர்க்கிறது. தமிழ்நாட்டில் உள்ள ஒன்றிய அரசுசார்ந்த நிறுவனங்கள், அலுவலகங்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்த தகுதியான ஆண்-பெண் விண்ணப்பதாரர்களுக்கே முன்னுரிமை அளிப்பது உறுதி செய்யப்படும்.

## மகளிர் நலன்

1. சிறுகுறு தொழில்களில் பெண்களை ஊக்குவித்து அவர்களின் பங்களிப்பை அதிகரிக்கும் வகையில், தற்போது உள்ள 30% மூலதன மானியம் பெண்களுக்கு 35% -ஆக உயர்த்தி வழங்கப்படும்

2. இந்திய அளவில் விவசாயத்தில் அதிகரித்து வரும் பெண்களின் பங்களிப்பை ஊக்குவிக்கும் வகையில் தேசிய அளவில் பெண் விவசாயிகளுக்கு டிராக்டர்கள் மற்றும் பிற விவசாய இயந்திரங்களை இயக்குவதற்கான பயிற்சி, மண் ஆரோக்கியம் குறித்த பயிற்சி, செயல்விளக்கம், விதை உற்பத்தி, விதை தொழில்நுட்பம் ஆகியவை குறித்துத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்படும்.

3. சமத்துவத்தை நோக்கிய பயணத்தில் இந்தியாவை முன்னேற்றிக் கொண்டு சென்றிட பெண்களுக்கு மாதவிடாய் காலங்களில் விடுமுறை கொடுப்பது அவசியமாகும். அதன் அடிப்படையில் இது சம்பந்தமான சட்டம் ஒன்றை நாடாளுமன்றத்தில் கொண்டு வந்திட ஒன்றிய அரசை தி. மு. க. வலியுறுத்தும்.

4. மாவட்ட அளவில், பெண்கள் மட்டுமே நிர்வகிக்கும் கொள்முதல் மற்றும் விற்பனை சந்தைகளை அமைத்து, தனிப்பட்ட அடையாள அட்டைகள் வழங்கப்படும்.

5. பல்வேறு உலக நாடுகள், பெண் தொழிலாளர்களுக்குத் தேசிய சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் மூலம் மகப்பேறு காலத்தில் பொருளாதார உதவிகளை வழங்கிவருவது போல், தமிழ்நாட்டில் முத்தமிழறிஞர்

கலைஞர் அவர்கள் 1989 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்திய டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம் இந்திய அளவில் நடைமுறைப்படுத்தப்படும். இத்திட்டத்தால் பாகுபாட்டைத் தவிர்த்து பாலின உரிமைகள் பணியிடங்களில் உறுதி செய்யப்படும்.

6. வீட்டுப்பணியாளர் நலன்களைக் காத்திடும் வகையில் ஒருங்கிணைந்த தேசியச் சட்டம் ஒன்று உருவாக்கப்படும். இதன் மூலம் அவர்களுக்கான குறைந்தபட்ச ஊதியம் மற்றும் உரிமைகள் நிலைநாட்டப்படும்.

7. வீட்டுப்பணியாளர்கள் நியமனங்களை முறைப்படுத்துதல், அவர்களுடைய சமூகப் பாதுகாப்பு, அவர்களின் குறைகளைக் களைதல் முதலியவற்றுக்காக முத்தரப்புக் குழு ஒன்று அமைக்கப்படும்.

8. இந்திய அளவில் சுய உதவிக் குழுவில் உள்ள மகளிர்களுக்கு வட்டி இல்லா வாகனக் கடன் ரூ. 1 லட்சம் வரை வழங்கப்படும்.

## புலம்பெயர்வோர் நலன்

1. விதிமுறைகளுக்கு மாறாக வெளிநாடுகளுக்கு வேலைக்காக அனுப்பப்படுவோர் பாதிக்கப்பட்டால், உயிரிழக்க நேர்ந்தால் அவர்களை அனுப்பி வைத்த முகமைகள் மற்றும் அவர்களுடைய துணை முகமைகள் கண்டிப்பாக கண்காணிக்கப்பட்டு அவர்களது உரிமம் ரத்து செய்யப்படும்.

2. புலம்பெயர்ந்தோர் கணக்கெடுப்புகளின் மூலம் வேலைக்காக வெளிநாடுகளுக்குப் புலம் பெயர்ந்தோர் எண்ணிகையும், அவர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தாருக்கும் ஏற்பட்ட பிரச்சினைகளும் மதிப்பிடப்பட்டன. தமிழ்நாட்டில் இத்தகைய கணக்கெடுப்பு ஏறத்தாழ 10 ஆண்டுகளுக்கு முன் நடைபெற்றது. தற்போது புதிய சில நாடுகளுக்கும் வேலைக்காகப் புலம்பெயர்வதால் புதிய விதிமுறைகள் உருவாக்கப்படும்.

## ரயில்வே

1. ரயில்வே துறைக்கு எனத் தனி பட்ஜெட் மீண்டும் உருவாக்கப்படும்.

2. இந்தியா முழுவதும் ரயில் விபத்துகளைத் தடுக்கவும், பயணம் செய்வோரின் பாதுகாப்பை உறுதி செய்யவும் ஜி.பி.எஸ் அடிப்படையிலான தானியங்கி இரயில் பாதுகாப்பு, தகவல் அடிப்படையிலான சிக்னல் கட்டுப்பாடு

(Automatic Train Protection (ATP) and Communication-Based Train Control (CBTC), Signaling and Train Control Systems, GPS-based tracking) போன்ற தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படும்.

3. இந்தியாவில் உள்ள அனைத்து ரயில்வே மண்டலங்களுக்கும் சம அளவில் நிதி ஒதுக்கப்படும். அந்தந்த ரயில்வே மண்டல வேலைவாய்ப்புகளில் அந்தந்த மாநிலங்களைச் சேர்ந்த இளைஞர்களுக்கு 90 % வேலைவாய்ப்புகள் வழங்கப்படும்.

4. மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள், மூன்றாம் பாலினத்தோர் மற்றும் மாணவர்களுக்கு ரயில்வே துறையில் வழங்கப்பட்டு வந்த கட்டணச் சலுகை மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும்.

5. திருச்சி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர் ஆகிய நகரங்களில் புறநகர் மின்சார இரயில் சேவைகள் அமைக்கப்படும்.

6. இரயில்வே துறைக்குச் சிறந்த வருமானத்தை ஈட்டித் தரக்கூடிய இரயில் போக்குவரத்து நெரிசல் மிகுந்த விழுப்புரம்-தஞ்சை இடையிலான பிரதான பாதையில் இரண்டாவது இரயில் பாதை அமைக்கப்படும்.

7. மொரப்பூர் ரயில் நிலையத்தையும் தர்மபுரி ரயில் நிலையத்தையும் இணைக்கும்வகையில்புதியஅகலரயில்பாதைத்திட்டம்செயல்படுத்தப்படும்.

8. ஜோலார்பேட்டை ரயில் நிலையம் முதல் கிருஷ்ணகிரி-ஓசூர் ரயில் நிலையம் வரை புதிய ரயில் பாதைத் திட்டம் அமைக்கப்படும்.

9. கள்ளக்குறிச்சி முதல் திருவண்ணாமலை வரை ரயில் பாதை அமைக்கப்படும்.

10. பட்டுக்கோட்டை ரயில் வழித் தடத்தில் கம்பன் எக்ஸ்பிரஸ் ரயில் மீண்டும் இயக்கப்படும்.

11. பட்டுக்கோட்டை - மன்னார்குடி, பட்டுக்கோட்டை - தஞ்சாவூர் இடையில் புதிய ரயில் பாதைகள் அமைக்கப்படும்.

12. திருவாரூரில் இருந்து மதுரை, திருச்செந்தூர், பழனி ஆகிய இடங்களுக்கு இரயில் சேவை ஏற்படுத்தப்படும்.

13. திருவாரூர்-சென்னைக்குஇடையேபகல்நேரஇரயில்சேவைஏற்படுத்தப்படும்.

14. காவிரி நதிப் படுகை மாவட்டங்களிலிருந்து பயணிகளுக்குத் தேவையான தொலைதூர ரயில்களை இயக்க ஏதுவாக கும்பகோணம் அருகிலுள்ள திருநாகேசுவரம் ரயில் நிலையம் அருகில் ரயில் பெட்டி பராமரிப்பு வசதி ஏற்படுத்தப்படும்

15. தமிழ்நாட்டில் திருச்சி, திருநெல்வேலி, சேலம், துத்துக்குடி, தஞ்சாவூர் ஆகிய நகரங்களிலும் மெட்ரோ ரயில் சேவை ஏற்படுத்தப்படும்.

16. காரைக்கால், நாகை, தஞ்சை ரயில் பாதை இரட்டை ரயில் பாதைகளாக மாற்றப்படும்.

17. டெல்லி-மும்பை இடையே செயல்படுத்தியுள்ள பிரத்தியேக விரைவு போக்குவரத்துத் தடத்தைப் (dedicated freight corridor) போன்று சென்னை-கோயம்புத்தூர்- தூத்துக்குடி ஆகிய நகரங்களை இணைத்து ஒரு விரைவு சரக்கு போக்குவரத்துத் தடம் புதிதாகச் செயல்படுத்தப்படும்.

18. சென்னையில் தொடங்கி கன்னியாகுமரி வரை கிழக்கு கடற்கரையை ஒட்டி ஒரு புதிய ரயில் பாதை அமைக்கப்படும்.

## விமான நிலையங்கள்:

1. கோவை, திருச்சி, மதுரை, தூத்துக்குடி மற்றும் சென்னை விமான நிலையங்களின் விரிவாக்கப் பணிகள் விரைவுபடுத்தப்படும்.

2. கோவை மற்றும் சென்னை விமான நிலையங்களிலிருந்து வெளிநாட்டிற்கு விமான சேவைகள் அதிகரிக்கப்படும்.

3. மதுரை மற்றும் தூத்துக்குடி விமான நிலையங்கள் சர்வதேச விமான நிலையங்களாகத் தரம் உயர்த்தப்படும்.

## மீனவர் நலன்:

1. பாரம்பரிய மீனவ சமுதாய மக்கள் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கப்படுவார்கள்.

2. தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கை இராணுவத்தினரால் தொடர்ந்து தாக்கப்படுவதையும்,சிறைப்பிடிக்கப்படுவதையும், குறித்து தி.மு.கழகம்

கடுமையான முறையில் தனது கண்டனத்தைத் தொடர்ந்து தெரிவித்து வருகிறது. இந்தப் பிரச்சினை தீர்க்கப்படுவதற்கு இலங்கை அரசு இதுவரை உரிய முயற்சிகளை மேற்கொள்ளவில்லை. புதிய ஒன்றிய அரசின் மூலம் உடனடியாக இப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காணப்படும். இரு நாட்டுக் கடற்கரைப் பகுதிகளிலும் சிக்கல் தீர்க்கும் மையங்கள் (Crisis Management Centre) உருவாக்கப்படும்.

3. இந்தியாவில் உள்ள அனைத்துக் கடலோர, உள்நாட்டு மீனவர்களின் நலன்களைப் பாதுகாத்திட தேசிய மீனவர் நல ஆணையம் (National Commission for the Welfare of Fishermen) அமைக்கப்படும்.

4. ஆழ்கடல் மீன்பிடிக் கொள்கையை உருவாக்குவதற்காக அமைக்கப்பட்ட மீனாகுமாரி குழுவின் பரிந்துரைகள் இந்திய மீனவர்களின் நலன்களுக்கு எதிராக அமைந்திருப்பதால், அந்த அறிக்கை கைவிடப்படும்.

5. நடுக்கடலில் உயிரிழக்கும் மீனவர்களின் குடும்பங்கள், இறப்புச் சான்றிதழ் பெறுவதற்கு ஏழாண்டுகள் காத்திருக்கும் அவலநிலையைப் போக்கி, மீனவர் சங்கங்களின் பிரமாண வாக்குமூலத்தின் அடிப்படையில் இறப்புச் சான்றிதழ் வழங்கப்பட ஆவன செய்யப்படும்.

6. சுற்றுச்சூழல் மாற்றங்களால் ஏற்படும் புயல், சுனாமி போன்ற நிகழ்வுகளின்போது ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளவர்களுக்குத் தகவல் தொடர்புகள் கிடைக்காமல், மீனவர்கள் கரை சேர முடியாமல், நடுக்கடலில் மாயமாகி இறக்கிறார்கள்.

இத்தகைய தருணங்களில் தமிழ்நாட்டு மீனவர்களைக் காப்பதற்காகத் தகவல்களை உடனுக்குடன் அவர்களுக்குத் தெரிவிக்க, அவர்களிடமிருந்து தகவல்கள் கரைக்குக் கிடைத்திடத் தக்கவகையில் தமிழ்நாட்டுக் கரையோரங்களில் உயர்கோபுரங்கள் அமைத்துத் தங்கு தடையற்ற தொலைத் தொடர்பு வசதிகள் (Seamless Communications) உருவாக்கப்படும். அவற்றின் மூலம் தகவல்களை நெடுந்தொலைவில் பயணிக்கும், ஆழ்கடல் மீன்பிடி வணிகக் கப்பல்களுக்கும் (MERCHANT VESSELS, ஒன்றிய பாதுகாப்பு அமைச்சகக் கப்பல்களுக்கும் (NAVY, COAST GUARD), துறைமுகக் கழகங்களின் (PORT TRUST) தொலைத் தொடர்பு மையத்திற்கும் உடனுக்குடன் தெரிவித்து மீனவர்களையும் படகுகளையும் காத்திட வழிவகுக்கப்படும்.

7. மீனவப் பிரதிநிதிகளை உள்ளடக்கிய பழவேற்காடு ஏரி வளர்ச்சி ஆணையம் (PULICAT LAKE DEVELOPMENT AUTHORITY) உருவாக்கப்படும்.

8. மீன்பிடித் தடைக்காலங்களில் மீனவர்களுக்கு மாற்றுப் பொருளாதார வேலை வாய்ப்புகளை உருவாக்க, மீனவ குடும்ப உறுப்பினர்களுக்கு, குறிப்பாக பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு மீன்கள் பதப்படுத்துதல், மீன் வளர்ப்பு, மீன் தீவனம் தயாரித்தல் மற்றும் சந்தைப்படுத்துதல் உள்ளிட்ட இனங்களில் பயிற்சிகள் வழங்கப்படும்.

9. உலர் மீன் முற்றங்கள் கட்டுதல் போன்ற மீனவர்களுக்குத் தேவையான தொழில் கட்டமைப்புப் பணிகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும்.

10. மீனவ சமுதாய மக்களை அவசர காலத்தில் பாதுகாக்க ஹெலிகாப்டர் தளம் தேவையான இடங்களில் அமைக்கப்படும்.

11. ஒவ்வொரு மீனவருக்கும் மீன்பிடித் தொழிலுக்கு ஏற்ப மானிய விலையில் மீன்பிடி வலைகள் வழங்கப்படும். தமிழ்நாட்டில் அனைத்து நகரங்களிலும் மீன் சந்தைகள் அமைக்கப்படும்.

12. நாகப்பட்டினம், அக்கரைப்பேட்டை மீன்பிடித் துறைமுகப்பகுதியில் ஆழ்கடல் மீன்கள் உள்பட அதிகளவு மீன்கள் வருவதால் பெரிய அளவில் குளிரூட்டப்பட்ட நிலையம் (Frozen Plant) அமைக்கப்படும்.

13. தேசிய மீன்வளக் கொள்கை 2020,21,22 மறுபரிசீலனை செய்யப்படும்.

14. மீனவர்களுக்கான ஒன்றிய அரசு காப்பீட்டுத் திட்டத்தின் தொகை பின்வருமாறு உயர்த்தப்படும்.

    - விபத்தில் இறந்த மீனவர்களின் குடும்பத்திற்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை ரூ. 7 லட்சமாக அதிகரிக்கப்படும்.
    - விபத்தில் ஊனமுற்றவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை ரூ. 3.5 லட்சமாக அதிகரிக்கப்படும்.

15. மீனவர்கள் மேம்பாட்டுக்காகத் தனி அமைச்சகம் உருவாக்கப்படும்.

16. மீனவர்களுக்கு வாழ்வாதார உதவித் தொகையாக இயற்கை சீற்றங்கள் ஏற்படும் நாள்களில் ஒரு நாளைக்கு தலா ரூ. 500 வாழ்வாதாரத்திற்கு இழப்பீடாக வழங்கப்படும்.

17. ஒருங்கிணைந்த கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்வளர்ப்புக்கு உதவிகள் வழங்கப்படும்.

## குழந்தைகள் நலன்

1. ஒரு குழந்தையின் வளர்ச்சியில் முக்கியமாகக் கருதப்படும் முதல் 1000 நாள்களுக்கு அவர்களது முழு ஆரோக்கியத்தை உறுதிசெய்ய விழிப்புணர்வு மற்றும் சிறப்புத் தலையீடுகளை உறுதி செய்ய பட்ஜெட் ஒதுக்கீடுகள் அதிகரிக்கப்படும்.

2. இலவச, தரமான, கட்டாய, குழந்தை நேயக் கல்வி ஒவ்வொரு குழந்தைக்கும் அவர்கள் வாழும் பகுதிகளுக்கு அருகிலேயே, அவர்களின் தாய்மொழியில் கிடைக்கவும் 18 வயது அல்லது 12ம் வகுப்பு வரையிலான அனைத்துக் குழந்தைகளுக்கும் நீட்டித்து, கல்வி உரிமைச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படும்.

3. மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு உகந்த பாடத்திட்டங்கள் நவீன நுட்பங்களோடு வடிவமைத்து வழங்கப்படும்.

4. அரசமைப்புச் சட்டம் உயர்த்திப் பிடிக்கிற சமத்துவம், சகோதரத்துவம், சமயச்சார்பின்மை, சமூக நீதி, சனநாயகம் உள்ளிட்ட மதிப்பீடுகளைக் குழந்தைகள் எளிதாகப் புரிந்து கொள்ளும் வண்ணம் அரசமைப்புச் சட்டம் கூறும் உரிமைக் கல்வி ஒரு பாடமாக வழங்கப்படும்.

5. அதிகரித்து வரும் வளரிளம் பருவத்தினரின் தற்கொலை விகிதங்களைத் தடுப்பதற்கும், மாணவர்களின் வாழ்க்கைத்திறனை மேம்படுத்துவதற்கும் விரிவான மனநலத் திட்டங்கள் பள்ளிகளில் செயல்படுத்தப்பட வழி வகுக்கப்படும்.

6. பள்ளி செல்லாக் குழந்தைகளைக் கண்டறிந்து அவர்களின் குடும்பச் சூழலை அறிந்து தேவையான பொருளாதார வாய்ப்பினை அளித்து அவர்கள் நிரந்தரமாகப் பள்ளிக் கல்வி பயில்வது உறுதி செய்யப்படும்.

7. வேலை, திருமணம், பாலியல் சுரண்டல், உடல் உறுப்புகளுக்காக குழந்தைகள் கடத்தப்படுவதைத் தடுக்க தனிச் சட்டம் இயற்றப்பட்டு அதற்குரிய சட்டபூர்வ விசாரணை அமைப்புகள் உருவாக்கப்படும்.

8. போதைப் பழக்கத்திற்கு ஆளான குழந்தைகளைக் கண்டறிந்து அவர்களை மீட்கும் வகையில் உடல், மன ரீதியிலான சிகிச்சை முறைகள் அளிக்கப்படும்.

9. போதை உள்ளிட்ட பழக்கங்களுக்கு ஆளாகும் குழந்தைகளுக்குத் தேவைப்படும் உடல் மற்றும் மனநல மருத்துவ வசதிகளும், போதுமான மனநல ஆலோசகர்களும் அனைத்து மாவட்டம் மற்றும் வட்டார அளவில் கிடைத்திட வழி செய்யப்படும்.

10. போதைப் பொருள்கள் குறித்தும், அதன் பின்விளைவுகள் குறித்தும் மேற்கொள்ளப்படும் விழிப்புணர்வு செயல்பாடுகள் தொடர்ச்சியாக அனைத்துப் பள்ளிகளிலும் சமூகத்தளத்திலும் வழங்கப்படும்.

## தொழிலாளர் நலன்

1. பாஜக அரசின் தொழிலாளர் விரோதச் சட்டங்கள் மறு சீரமைப்பு செய்யப்படும்.

2. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (EPF) மூலமாக, ஒன்றிய அரசால் வழங்கப்படும் ஓய்வூதியம் குறைந்த பட்சம் மாதம் ரூ.5000/- என வழங்கப்படும்.

3. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் வேலை நாள்கள் 100இல் இருந்து 150 நாள்களாக அதிகரிக்கப்படும். நாடு முழுவதும் மாநிலங்கள்/ யூனியன் பிரதேசங்களில் ரூ.400 ஊதியம் வழங்கப்படும்.

## சுற்றுச் சூழல் மற்றும் காலநிலை மாற்றம்

1. மாநிலப் பாடத்திட்டங்களில் காலநிலைக் கல்வி சேர்க்கப்படவேண்டும். கல்லூரிகளில் காலநிலை மாற்றம் குறித்த இருக்கைகள், ஆய்வுகள் ஊக்குவிக்கப்படும்.

2. இந்தியா 2050 ஆம் ஆண்டுக்குள் கார்பன் சமநிலையை எட்டும் என்கிற அறிவிப்பை வெளியிட்டு, அதற்கான செயல்திட்டங்கள் வகுக்கப்படும்.

3. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை, வனப் பாதுகாப்புச் சட்டம், நீர் மற்றும் காற்று மாசுபாடு தடுப்புச் சட்டங்கள், கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை, உயிர்ப்பன்மையச் சட்டம், இந்திய வனச் சட்டம் ஆகியவற்றில் கடந்த பத்தாண்டுகளில் சுற்றுச்சூழல் மற்றும் காடுகளை, வணிக நோக்கில் சுரண்டுவதற்கு ஏதுவாக மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் ஆய்வு செய்யப்பட்டு தேவைப்படாதவை நீக்கப்படும்.

4. கடலோரக் குக்கிராமங்களுக்கும் பேரிடர் பாதுகாப்புக் கருவிகள் மற்றும் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். கடலோரப் பகுதிகளில் உள்ள மக்களிடம் ஆலோசித்து, பேரிடர்களால் அதிகம் பாதிக்காத கடலோரப் பகுதிகளில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட வழிவகை செய்யப்படும்.

5. மேற்குத் தொடர்ச்சி மலைப் பாதுகாப்புக்கெனத் தனிச் சட்டம் இயற்றி அதன்கீழ் ஆணையம் உருவாக்கப்படும்.

6. பொதுப் போக்குவரத்துப் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்குத் தேவையான அளவில் பல்வேறு வகைகளில் முதலீடு செய்யப்படும்.

7. குறு, சிறு தொழில் முனைவோர் மற்றும் குடியிருப்புகளில் சூரிய சக்தி உபயோகிக்க ஊக்கப்படுத்தப்படும். அனைத்து இல்லங்களுக்கும் பயனாளிகளின் 20 % பங்களிப்புடன் 80% அரசு மானியம் வழங்கி, சூரியஒளி மின்தகடுகள் (Solar Panels) வழங்கப்படும்

8. சிற்றூர் அளவிலும், ஒன்றிய அளவிலும் மாவட்ட அளவிலும் உயிர்ம வேளாண்மைக் குழுக்கள் (Organic Farming Groups) உருவாக்கப்பட்டு அவர்களுக்கு உரிய உதவிகள், நுட்பங்கள் கிடைக்க ஆவன செய்யப்படும்.

9. நிலம் மற்றும் நீர் மாசுபடுவதற்குக் காரணம் தொழில் மையங்களில் அமைந்துள்ள பெரிய மற்றும் சிறு, குறு ஆலைகளே. எனவே, ஆலைகளால் வெளியேற்றப்படும் மாசுக்கழிவுகளை முறையாக அகற்றி, சுற்றுச்சூழலைப் பாதுகாத்திட திருப்பூர், ஈரோடு, கரூர், திண்டுக்கல், வேலூர், அருப்புக்கோட்டை போன்ற நகரப் பகுதிகளில் இயங்கும் சாய ஆலைகள், தோல் பதனிடும் ஆலைகள் போன்ற தொழிலகங்கள் வெளியேற்றும் கழிவுகளைச் சுத்திகரிக்க ஒன்றிய நிதி உதவியுடன் அமைத்திடத் தேவையான CETP எனப்படும் கழிவு அகற்றும் பொதுவான சுத்திகரிப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

10. நம்நாட்டில் வானிலை ஆராய்ச்சி மையங்களில் 20 செ. மீட்டர் வரை மழைப் பொழிவைக் கணிக்கும் அளவிற்கே ரேடார்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் வெள்ள எச்சரிக்கையைச் சரியான நேரத்தில் தெரிவிக்கும் வகையில் அதி நவீன ரேடார் கருவிகள் அமைக்கப்படும்.

11. இந்தியாவிற்கான தனித்த காலநிலை மாதிரிகள் (Climate Models) உருவாக்கப்படும். அதன் அடிப்படையில், மாநில மற்றும் மாவட்ட அளவில் (Mesoscale) மாதிரிகள் உருவாக்கப்படும்.

12. தென் இந்தியாவிற்கான வானிலை ஆய்விற்காகத் தனித்த செயற்கைக்கோள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

13. நிகழ்நேர வெள்ளக் கண்காணிப்புத் தொழில்நுட்பம் (Real Time Flood Forecasting System) அனைத்து ஆறுகள் உட்பட கடந்தகாலங்களில் வெள்ளம் ஏற்பட்ட அனைத்து நீர்நிலைகளிலும் நிறுவப்படும்.

14. காலநிலை மாற்றத்தால் ஏற்படும் புயல் மற்றும் அதிக மழைப்பொழிவால் நகரங்கள் அதிக அளவில் பாதிக்கப்படுகின்றன. அந்நகரங்கள் கணக்கெடுக்கப்பட்டு அவற்றை மழை வெள்ளத்தைத் தாங்கும் நகரங்களாக (Flood Resilience Cities) மாற்றி அமைக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

15. சூரியஒளி இணைப்புடன் LTCT இணைப்புக்கும் பரிந்துரை செய்யும் முயற்சிகளை ஒன்றிய அரசை முன்னெடுக்கச் செய்யும்.

16. தமிழ்நாட்டில் உள்ள முக்கிய ஒன்றிய, மாநில அரசு அலுவலகங்கள் அனைத்தும் 100% சூரிய ஒளி மின்சாரத்தில் இயங்கும் அலுவலகங்களாக 2030 க்குள் மாற்றப்படும்.

17. மின்சார வாகனத்திற்கான மானியம் உயர்த்தப்படும்.

## பேரிடர் மேலாண்மை

விழிப்புணர்வு நகரத் திட்டம் (Vigilant City Program): வெள்ளம், சூறாவளிகள், நிலச்சரிவுகள் போன்ற பல்வேறு பேரிடர்களுக்கு ஆளாகும் நகரங்களைக் கண்டறிந்து, அந்த நகரங்களுக்குத் தனி அந்தஸ்து வழங்கப்பட்டு, தனி விழிப்புணர்வு நகர நிதி உருவாக்கப்பட்டு அந்த நகரங்களைப் பேரிடர் காலங்களில் காத்திட சிறப்பு வழிவகை செய்யப்படும்.

மாநிலங்களுக்குத் தற்போது ஒன்றிய அரசு வழங்கும் மாநில பேரிடர் நிவாரண நிதி, 75 சதவீதம் என்பது 90 சதவீதமாக உயர்த்தப்படும். மேலும் பேரிடர் நிவாரண நிதியின் வரம்புகள் மற்றும் நிபந்தனைகளை அந்தந்த மாநில அரசுகளே வகுத்துக்கொள்ளப் பரிந்துரை செய்யப்படும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு மாநிலங்களின் வெள்ளம், சூறாவளிகள், நிலச்சரிவுகள் போன்ற பேரிடர்களால் ஏற்படும் இழப்புக்களுக்கும் சீரமைப்புப் பணிகளுக்கும் நிதி ஒதுக்கீடு, அந்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் செய்யப்படும்.

## சிறுபான்மையினர் நலன்

1. CAA 2019 சட்டம் ரத்து செய்யப்பட்டு அனைத்து சிறுபான்மையினரும் எந்தப் பாகுபாடும் இல்லாமல் சமமாக நடத்தப்படுவார்கள்.

2. இஸ்லாமிய மற்றும் இதர சிறுபான்மையின மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்காக சச்சார் கமிட்டி பரிந்துரைகள் செயல்படுத்தப்படும்.

3. தமிழ்நாட்டில் உள்ளது போல அகில இந்திய அளவிலும் சிறுபான்மையினருக்கான இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

4. சிறுபான்மைக் கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிதி உதவி தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. அதனை மீண்டும் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

5. சிறுபான்மையினர் உரிமைகளைப் பறிக்கும் பொதுச் சிவில் சட்டம் நடைமுறைப்படுத்தப்படாது.

6. அரசு சாராத் தொண்டு நிறுவனங்கள் வெளி நாடுகளிலிருந்து பெற்று வந்த நிதி, அரசியல் காரணங்களுக்காக தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டம் முறையாகத் திருத்தம் செய்யப்பட்டு, இந்த நிதி உதவிகள் பிரச்சினையின்றி அரசு சாராத் தொண்டு நிறுவனங்களுக்கு தொடர்ந்து கிடைப்பதற்கு வழிவகை செய்யப்படும்.

7. சிறுபான்மையினர் பாதுகாப்பு ஆணையம்: சிறுபான்மையினரின் பிரச்சினைகள் குறித்து கண்காணித்திட நாட்டின் பல்வேறு பகுதிகளில் சில ஆணையங்கள் இருந்தபோதிலும் இந்தியா முழுவதும் பல புகார்கள் எழுந்தபடியேயுள்ளன. மதச்சார்பின்மை பாதுகாக்கப்பட, மத நல்லிணக்கம் மேம்பட துன்புறுத்தல், பாகுபாடு காட்டப்படுதலுக்கு எதிராக உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட ஒரு அமைதி ஆணையம் அமைக்கப்படும்.

## நீதித்துறை

1. 1870 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசால் உருவாக்கப்பட்ட தேசத்துரோகச் சட்டமானது, அரசுக்கு எதிரான கருத்துகளையும் விமர்சனங்களையும் ஒடுக்கவும் மக்களின் குரல்வளைகளை நசுக்கவும் பயன்படுத்தப்பட்டு

வருகிறது. கடந்த சில ஆண்டுகளாக இந்தச் சட்டத்தைக் கண்மூடித்தனமாக இந்திய ஒன்றிய அரசு பயன்படுத்துகின்றது. கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்கும் இந்த ஐபிசி சட்டத்தின் பிரிவு 124 நீக்கப்படும்.

2. நீதிபதி கே.எஸ்.புட்டாசாமி (ஓய்வு) vs இந்திய ஒன்றியம் என்ற வழக்கின் தீர்ப்புகளில் (2017 மற்றும் 2019) டிஜிட்டல் உரிமையும் தனிமனித அடிப்படை உரிமையே என்று கூறியதை அடிப்படையாகக் கொண்டு உச்சநீதிமன்றம் இணைய தரவு பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் உள்ள தனியுரிமை தொடர்பான கொள்கைப் பிரிவுகளில், டிஜிட்டல் உரிமையும் தனிமனித அடிப்படை உரிமையே என்ற திருத்தம் மேற்கொள்ளப்படும்.

## கல்வி

1. தமிழ்வழியில் படிக்கும் மாணவர்களுக்குப் பட்ட மற்றும் பட்டமேற்படிப்புகளில் ஒன்றிய அரசாங்கத்தின் கீழ் செயல்படும் கல்லூரிகளில் வாய்ப்பு அளிக்க தி. மு. க குரல் கொடுக்கும்.

2. இந்தியாவிற்கு முன்னோடித் திட்டமான "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்" இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலும் நடைமுறைப்படுத்தப்படும்.

3. சென்னையில் உள்ளது போல் இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT) மதுரையிலும், இந்திய மேலாண்மைக் கழகம் (IIM) கோவையிலும் அமைக்கப்படும்.

4. 5000 இளம் அறிவியல் வல்லுநர்கள், கண்டுபிடிப்பாளர்கள் ஆகியோரை உருவாக்க சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

## விளையாட்டு

1. நமது நாட்டின் வளமான கலாச்சாரப் பன்முகத்தன்மை மற்றும் பாரம்பரிய விளையாட்டுகளை ஊக்குவித்து வெளிப்படுத்துவதன் ஒரு பகுதியாக கபடி போட்டியை ஒலிம்பிக் போட்டியில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

2. விளையாட்டில் சிறந்து விளங்குவதற்கும், வட்டார அளவில் விளையாட்டுகளை மேம்படுத்துவதற்கும் மண்டல அளவில் அதிநவீன சர்வதேச விளையாட்டுப் பயிற்சி மையம் நிறுவப்படும்.

3. இந்திய அளவில் விளையாட்டுத் துறைக்குப் புதிய கொள்கை உருவாக்கப்படும்.

## சமூக நீதி

1. பா.ஜ.க அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள, குலத்தொழிலைச் செய்ய ஊக்குவிக்கும் 'விஸ்வகர்மா திட்டம்' சமூக நீதி அடிப்படையில் மாற்றி அமைக்கப்படும்.

2. தமிழ்நாட்டில் உள்ள ஒன்றிய அரசு நிறுவனங்களில் 69 சதவீத இட ஒதுக்கீட்டைப் பின்பற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் அனைத்து மாநிலங்களிலும் உள்ள ஒன்றிய அரசு நிறுவனங்களில் உரிய பிரதிநிதித்துவத்தை உறுதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

3. நாட்டில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனங்கள் (ஐஐடி), மற்றும் இந்திய மேலாண்மை கழகம் (IIM) மற்றும் ஒன்றிய அரசின் இதர உயர்கல்வி நிறுவனங்களில் தற்போது ஆசிரியர் நியமனம் மற்றும் தேர்வு பேனல்களில் இட ஒதுக்கீடு, முறையாகப் பின்பற்றப்படவில்லை. இந்நிறுவனங்களில் மண்டல் கமிஷன் அடிப்படையிலான இடஒதுக்கீட்டு முறை கண்டிப்பாகப் பின்பற்றப்படும்.

4. கிருஷ்ணகிரி, தர்மபுரி மற்றும் தமிழ்நாட்டின் இதர மாவட்டங்களில் வசித்து வரும் வால்மீகி இன மக்கள் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கப்படுவார்கள்.

5. குன்னுவார் இன மக்கள் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கப்படுவார்கள்.

6. வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், வீடற்ற மக்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கும் உறுதியான வாழ்வாதாரத் உரிமைத் திட்டம் நிறைவேற்றப்படும்.

7. உயர்கல்வி நிறுவனங்களிலும், வேலை வாய்ப்புகளிலும் பட்டியலின, மற்றும் இதர பிற்படுத்தப்பட்டவர்களுக்கான இடஒதுக்கீடுகள் முறையாகச் செயல்படுத்தப்படுவதை உறுதி செய்ய தேசிய மற்றும் மாநிலங்களின் அளவில் பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் அனைவருக்குமான ஆணையம் (Commission for Diversity, Equity and Inclusion) அமைக்கப்படும்.

8. இந்த ஆணையத்தின் வழிகாட்டு நெறிமுறைகளையும், உத்தரவுகளையும் பின்பற்றாத அல்லது குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் நிறைவேற்றத் தவறிய உயர்கல்வி நிறுவனங்களுக்கான நிதி குறைப்பு அல்லது தரவரிசை மீதான நடவடிக்கை போன்றவை மேற்கொள்ளப்படும்.

9. 2019 ஆம் ஆண்டு அசிம் பிரேம்ஜி பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில், தனியார் துறை வேலைகளில், குறைந்த ஊதியம் பெறும் வேலைகளுடன் ஒப்பிடுகையில், அதிக ஊதியம் பெறும் வேலைகளில் பட்டியலினத்தினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர் குறைவாக உள்ளதாகத் தெரியவந்துள்ளது. இது, பணியிடங்களில் சமூக நீதியை உறுதி செய்ய, தனியார் துறைக்கும் இடஒதுக்கீட்டை விரிவுபடுத்துவதன் அவசியத்தை வலியுறுத்துகிறது. ஆகவே, தனியார் துறையிலும், இடஒதுக்கீட்டு முறையை அமல்படுத்த உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

10. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன் கருதி 50% இட ஒதுக்கீட்டை திமுக உறுதி செய்யும். Creamy Layer அறவே ரத்து செய்யப்படும். பதவி உயர்வில் இட ஒதுக்கீடு அளிக்க வழிவகை செய்யப்படும்.

11. மாநில அரசின் இதர பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம் பெற்ற சாதிகளை ஒன்றிய இதர பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இணைக்க வழிவகை செய்யப்படும்.

## சாதிவாரிக் கணக்கெடுப்பு:

பத்தாண்டுகளுக்கு ஒரு முறை இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பை ஒன்றிய அரசு இதுவரை மேற்கொண்டு வந்துள்ளது. 2021 ஆம் ஆண்டு எடுக்க வேண்டிய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இனிவரும் காலத்தில் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்படும். இந்த கணக்கெடுப்போடு சாதி வாரிக் கணக்கெடுப்பு வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள் குறித்த கணக்கெடுப்பு என அனைத்துக் கணக்கெடுப்புகளும் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒரே நேரத்தில் ஒன்றிய அரசால் மேற்கொள்ளப்படும்.

## சமூக நல்லிணக்கம்

சாதி, மத வன்முறை மற்றும் மோதல்கள் ஏற்படக்கூடிய மாவட்டங்களில், சிறிய மற்றும் பெரிய அளவிலான சாதி, மத மோதல்கள் உருவாவதைத் தடுப்பதற்காகச் சமூக ஆர்வலர்கள், வழக்கறிஞர்கள், வட்டார அரசு அலுவலர்கள், சமூகத் தலைவர்கள் மற்றும் காவல்துறை சார்பு ஆய்வாளர்கள் ஆகியோர் கொண்ட அமைதி மற்றும் நல்லிணக்க அமைப்புகள் ஏற்படுத்தப்படும்.

## பொருளாதாரம்

1. தேங்காய்களைக் கொள்முதல் செய்து பதப்படுத்தி வைக்க சேமிப்புக் கிடங்குகள் அமைக்கப்படும்.

2. தீப்பெட்டி உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருள்கள் தங்குதடையின்றிக் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

3. பருத்தியை 100% CCI மூலம் MSP விலையில் நாடு முழுவதும் வழங்க வழிவகை செய்யப்படும்.

4. அத்தியாவசிய உணவுப் பொருள்களான அரிசி, கோதுமை, பருப்பு, சமையல் எண்ணெய் மற்றும் தானிய வகைகளுக்கு ஜிஎஸ்டி வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

5. மகாத்மா காந்தி கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டை ஆண்டுக்குக் குறைந்தது 1,50,000 கோடி ரூபாயாக அதிகப்படுத்துவதற்கான முயற்சிகளை புதிய ஒன்றிய அரசு மேற்கொள்ளும்.

6. மகாத்மா காந்தி கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் போல் "நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்" கீழ் குறைந்தப்பட்சம் 100 நாட்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தர புதிய சட்டம் இயற்றப்படும்.

7. இந்தியப் பொருளாதாரமும் தமிழ்நாடு பொருளாதாரமும் குறைந்தபட்சம் 9% முதல் 10% வரை தொடர் வளர்ச்சி பெற்றிடத் தேவையான அனைத்து முயற்சிகளையும் புதிய அரசு மேற்கொள்ளும்.

8. குறு சிறு தொழில் (MSME) நிறுவனங்களுக்கு எளிய முறையில் உரிமங்கள் (ESI, EPF, GST, Running License, Inspector of Factories, Trade, Pollution Control etc) கிடைக்க வழிவகை செய்யப்படும்.

9. தேசிய அளவில் தொழில் தொடங்கும் நடைமுறையை எளிமையாக்க அனைத்து அனுமதிகளும் ஒரே இடத்தில் கிடைக்க ஒற்றைச் சாளர முறை (Single Window Clearance Facility) அறிமுகப்படுத்தப்படும்.

10. தமிழ்நாடு அரசு பல புதிய தொழில் முதலீடுகளை ஈர்த்து வருவதால், அந்தத் தொழில்களைத் தாங்கி நிற்கும் நகரங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு ஒன்றிய அரசு மூலம் தேவையான நிதி வழங்கப்படும்.

11. கட்டுமானப் பொருள்களின் விலை ஏற்றத்தினைத் தடுக்க புதிய சட்டங்கள் கொண்டுவரப்படும்.

12. பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு போன்ற அத்தியாவசியப் பொருள்கள் மீண்டும் "நிர்வகிக்கப்பட்ட விலை முறையின்" (Administered Pricing Mechanism) கீழ் கொண்டு வரப்படும்.

## வணிகர் நலம்

1. விற்பனை வரி செலுத்துவோர், படிவங்களை நிரப்பும் போது ஏற்படும் தவறுகளை சரி செய்ய வாய்ப்பு வழங்கப்படும். இந்தத் தவறுகளுக்காக அவர்களிடம் கூடுதல் வரி வசூலிப்பதும் அவர்களுக்குத் தண்டனை வழங்குவதும் முழுமையாக நிறுத்தப்படும்.

2. வணிகம் சம்பந்தமான சட்ட முன்வடிவுகள் கொண்டுவருகின்றபோது வணிக அமைப்புகளின் பிரதிநிதிகளைக் கலந்தாலோசித்து சட்டங்கள் இயற்றப்படும்.

3. பெருவெள்ளம், கனமழை, புயல், பூகம்பம் போன்ற இயற்கைப்பேரிடரால் பாதிக்கப்படும் சிறு வணிகர்கள் முதல் வணிக நிறுவனங்கள், உற்பத்தியாளர்கள், பெருநிறுவனங்கள் என வணிகத்தில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்பினருக்கும், உரிய ஆய்வு செய்து, பாதிப்பு அளவீட்டு அடிப்படையின்படி இழப்பீடுகள் வழங்கப்படும்.

## சரக்கு மற்றும் சேவை வரி (ஜி.எஸ்.டி) சீர்திருத்தம்:

1. ஒன்றிய அரசின் மாநிலங்களுக்கான நிதிப்பங்களிப்பு அந்தந்த மாநிலங்களில் வசூலாகும் வருமான வரி, ஜி.எஸ்.டி ஆகியற்றின் அடிப்படையில் அமைய வேண்டும். எனவே அந்தந்த மாநிலங்களில்

வசூலாகும் வரிகளின் அடிப்படையில் நிதிப்பங்களிப்பு வழங்குவது உறுதி செய்யப்படும். மாநிலங்களுக்கு நிதி வழங்கப்படும் போது 1971 ஆண்டு மக்கள் தொகையைக் கணக்கில் கொண்டு அதன் அடிப்படையிலேயே நிரந்தரமாக நிர்ணயிக்கப்படும்.

2. மாநிலங்கள் பெறக்கூடிய கடனளவை நிர்ணயம் செய்யும் உரிமை, மாநிலங்கள் சட்டப்பேரவைகளில் முன்வைத்து நிறைவேறிய நிதிநிலை அறிக்கையின் படி அமையும், நிதிப் பொறுப்பு மற்றும் நிதி நிலை மேலாண்மை(FRBM) அடிப்படையில்தான் அமைய வேண்டும். இதில் ஒன்றிய அரசின் தலையீடு எந்த வகையிலும் இருக்கக்கூடாது என்பது உறுதி செய்யப்படும்.

3. கல்வி பயிலும் பெண் குழந்தைகள், பெண்கள் ஆகியோரின் விகிதத்தைப் பொருத்தும், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மாநிலங்களின் பங்களிப்பின் அடிப்படையிலும் கூடுதல் நிதி ஒதுக்கீடு வழங்கப்படும்.

4. எந்த நிலையிலும் மாநிலங்களுக்கு வழங்கப்படும் நிதிப் பகிர்வு அந்த மாநிலத்தில் வசூலாகும் வரி அளவில் 33% க்குக் குறையாமல் இருப்பது உறுதி செய்யப்படும். அது போலவே மாநிலங்களுக்கு வழங்கப்படும் நிதிப்பங்களிப்பு வசூலாகும் நிதியிலிருந்து மூன்று மடங்கிற்கு மிகாமல் இருப்பது உறுதி செய்யப்படும்.

5. மாநிலத்தில் வசூலாகும் சேவை வரி, கூடுதல் வரி, ஆயத்தீர்வை உள்ளிட்ட அனைத்து வரிகளும் ஒன்றிய - மாநில அரசுகளுக்கிடையே பகிர்ந்து கொள்ளக்கூடிய வருவாயாகக் கணக்கில் கொள்ளப்படும்.

6. ஜி.எஸ்.டி வரி வசூல் முழுமையாக மாநில அரசால் மேற்கொள்ளப்பட்டு மாநிலங்களுக்கான பங்களிப்பு போக மீதமுள்ள தொகை ஒன்றிய அரசுக்கு வழங்கப்படும்.

## நெசவாளர் நலன்

1. நெசவாளர்களுக்குப் பட்டு, பாவு, ஜரிகை போன்ற மூலப் பொருள்களுக்கு முழுமையாக ஜி. எஸ். டி. வரி நீக்கப்படும்.

2. கைத்தறி (உற்பத்திக்கான பொருள்களை முன்பதிவு செய்தல்)-1985 சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டு விதிகள் கடுமையாக்கப்படும்.

3. கைத்தறித் தொழிலைப் பாதுகாக்க நூல்கள், சாயங்கள்/ ரசாயனங்கள் மற்றும் கைத்தறிப் பொருள்கள் மீதான ஜிஎஸ்டி-க்கு விலக்கு அளிக்கப்படும்.

4. புதிய ஜவுளி பூங்காக்கள் மற்றும் ஜவுளிச் சந்தைகள் அமைக்கப்படும்.

5. ஜவுளித் தொழிலை நவீனப்படுத்துவதற்கென நடைமுறையில் இருந்து வந்த TUF நிறுத்தப்படுள்ளது. அதற்கு மாற்றாக, ஜவுளித்தொழிலை நவீனப்படுத்த புதிய TUF திட்டம் கொண்டு வரப்படும்.

6. மனிதர் உருவாக்கும் இழை (Man Made Fibre) என்ற அடிப்படையில் ஜவுளித்துறையை வளர்க்க இத்துறைக்குத் தேவையான இடுபொருட்கள் நியாமான விலையில் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டும்.

## மருத்துவம் மற்றும் குடும்ப நலன்

1. இந்தியாவின் 4 பெரும் நகரங்களில் சர்வதேசத் தரம் வாய்ந்த மருத்துவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்கள் அமைக்க புதிய ஒன்றிய அரசு ஆவன செய்யும்.

2. அரசு மருத்துவமனைகளில் குறைந்த செலவில் கேன்சர் நோயாளிகளுக்குப் புற்றுநோய் வெள்ளை அணுக்கள் சிகிச்சை முறை (cancer immunotherapy) வழங்கப்படும்.

3. சமூகப் பங்கேற்புடன் காச நோய் இல்லாத இந்தியா உருவாக்கப்படும்.

4. சர்க்கரை நோய் போன்ற தொற்றா நோய்களுக்கான ஆய்வு மையங்கள் (Centres of Innovation) அமைக்கப்படும்.

5. வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பத்தினருக்கான மருத்துவக் காப்பீட்டுத் தொகை ரூபாய் 10 லட்சமாக உயர்த்தப்படும்.

6. மரபணு நோய்கள் மற்றும் பிறவிக் குறைபாடுகளுக்காகச் சிறப்பு மருத்துவ மையங்கள் அமைக்கப்படும்.

7. ஒன்றிய அரசால் தடை செய்யப்பட்ட மாத்திரைகள் ஆன்லைன் மருந்து விற்பனைத் தளங்களில் கிடைப்பதால் ஆன்லைன் மருந்து விற்பனை முற்றிலுமாகத் தடை செய்யப்படும்.

8. பொது சுகாதாரத் திட்டங்களுக்கு நாட்டின் மொத்த உற்பத்தியில் (GDP) 3% அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

9. மதுரை எய்ம்ஸ் (AIIMS) கட்டுமானப் பணி விரைந்து முடிக்கப்படவும், தமிழ்நாட்டில் உள்ள மேலும் 4 மண்டலங்களிலும் எய்ம்ஸ் (AIIMS) கொண்டுவரவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

10. மதுரையில் அறிவிக்கப்பட்ட தேசிய மருந்துக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (NIPER) இன்னும் அமைக்கப்படாமல் உள்ளது. இக்கல்வி நிறுவனத்தை உடனடியாக தொடங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

11. வானூர்தி ஆம்புலன்ஸ் திட்டம் மூலம் தீவிர நோய்களுக்குச் சிகிச்சை அளிக்க பல்வேறு மாநிலங்களில் உள்ள உயர் மருத்துவ மையங்களை எளிதில் அணுக முடியும். அதுமட்டுமின்றி உலகளவில் பல்வேறு நகரங்களுக்கும் எளிதில் செல்ல முடியும். இச்சேவையினை அரசே வழங்கும் வகையில் புதிய சட்டம் வகுக்கப்படும்.

12. இந்தியாவின் மருத்துவக் கட்டமைப்பில் சிறப்பாகச் செயல்படும் தனியார் மருத்துவ நிறுவனங்களுடன் இணைந்து பின்தங்கிய பகுதிகளில் மருத்துவக் கட்டமைப்பு மேம்படுத்தப்படும்.

13. கிராமப்புற மற்றும் சமூகத்தில் பின்தங்கிய பகுதிகளில் பணிபுரிய விரும்பும் மருத்துவர்களுக்கு நிதிச்சலுகைகள், வீட்டு வசதிகள் மற்றும் மருத்துவத் தொழில்முறை வளர்ச்சிக்கான வாய்ப்புகள் வழங்கப்படும்.

## தொகுதி மறுசீராய்வு:

தமிழ்நாட்டில் 1971 ஆம் ஆண்டு நடைபெற்ற தொகுதி மறுசீரமைப்புப் பணிகளின் போது, தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசின் குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தியதால் மக்கள் தொகை குறைந்து, 41 நாடாளுமன்றத் தொகுதிகள், 39 ஆகக் குறைக்கப்பட்டன. 2002 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட சட்டத்தின் அடிப்படையில், மாநிலங்களின் வலியுறுத்தலால் தொகுதி எண்ணிக்கை பழைய அளவிலேயே இருக்கும் என்று ஒன்றிய அரசு முடிவெடுத்து அதன் அடிப்படையில் தொகுதி எண்ணிக்கை தொடர்கிறது. இதே நிலை வரவிருக்கும் தொகுதி மறுசீராய்வின் போதும் தொடர்வதை தி.மு.கழகம் உறுதிப்படுத்தும்.

# விவசாயம்

1. தேசிய வேளாண் கூட்டுறவு நிறுவனத்தின் மூலம் ஆண்டு முழுவதும் கொப்பரைத் தேங்காய்களை அடிப்படை ஆதாரவிலை நிர்ணயித்து வாங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2. வாழை, மஞ்சள், மரவள்ளிக் கிழங்கு, பருப்பு வகைகள், மிளகாய், சிறுதானிய வகைகள், தேயிலை, எண்ணெய் வித்துகள், தோட்டக்கலை விளைபொருள்கள் போன்றவற்றிற்கும் குறைந்தபட்ச ஆதாரவிலை (MSP) நிர்ணயிக்க தேசிய அளவிலும், மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் விவசாயப் பிரதிநிதிகள் அடங்கிய வேளாண் மேம்பாட்டுக் குழுக்கள் (Agriculture Development Council) அமைக்கவும், தேவையான அளவு சிறு தானியங்களை அரசே கொள்முதல் செய்து, நியாயவிலைக் கடைகள் மூலம் விற்பனை செய்யவும் புதிய அரசு ஆவன செய்யும்.

3. கோதாவரி - காவிரி திட்டத்தை விரைவில் நிறைவேற்றச் செய்து தமிழ்நாட்டின் விவசாயம் செழிக்க வழிவகை செய்யப்படும்.

4. பாசனத்திற்கு உதவும் வகையில் கேரள மாநில அரசுடன் பேசி பம்பை - அச்சன்கோவில்- வைப்பாறு ஆறுகளை இணைக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

5. விவசாய இடுபொருள்களான பூச்சிக்கொல்லி மருந்து மற்றும் உரம் போன்ற பொருள்களுக்கு விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஜிஎஸ்டி வரி குறைக்கப்படும்.

6. எம்.எஸ் சுவாமிநாதன் குழுவின் பரிந்துரைகளை ஏற்று, வேளாண் விளைபொருள்களுக்கு மொத்த உற்பத்திச் செலவு + 50% என்பதை வலியுறுத்தி விவசாயிகளுக்குக் குறைந்தபட்ச விலை நிர்ணயம் (MSP) செய்யப்படும்.

7. ஒரு விவசாயியிடமிருந்து வாங்கப்படும் விதை நெல்லில் 2 ஹெக்டேருக்கான நெல்லுக்கு மட்டும் வழங்கப்படும் உற்பத்தி மானிய வரம்பு 10 டன் நெல் அளவிற்கு உயர்த்தி வழங்கப்படும்.

8. PM-KISAN திட்டத்தின் கீழ் நிதி உதவி ரூ. 12,000 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

9. விவசாயிகளைப் பாதுகாப்பதற்கும், உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், விவசாய முறைகளில் ஏற்படும் காலநிலை மாற்றத்தின் தாக்கங்களைக் குறைப்பதற்கும் பருவநிலையைத் தாங்கும் விவசாயக் கொள்கைகளை வகுத்துச் செயல்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

10. விவசாயிகள் தாங்கள் விளைவிக்கும் விளைப்பொருள்களைப் பாதுகாக்கும் குளிர்பதனக் கிடங்குகள் மாவட்ட அளவில் அமைக்கப்படும்.

11. தரமான இரசாயன மற்றும் இயற்கை உரங்கள் நியாயமான விலையில் கிடைக்க வழிவகை செய்யப்படும்.

12. நவீன விவசாயத் தொழில்நுட்பங்கள் மற்றும் நடைமுறைகள் செயல்படுத்தப்படும்.

13. விவசாயத்திற்குத் தேவையான அத்தியாவசிய இயந்திரங்கள் நாடுமுழுவதும் விவசாயிகளுக்குச் சொந்தமாகவோ, அரசுத்துறைகள் மூலமாகவோ கிடைக்க வழிவகை செய்யப்படும்.

14. மேகதாது அணை கட்டும் முயற்சிகள் தடுக்கப்படும்:

15. டெல்டா பகுதி விவசாயிகளின் நலன்களைக் காத்திடவும், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் குடிநீர் வசதிகளை அளிப்பதற்கும் உயிராதாரமாகத் திகழும் காவிரியில் உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக மேகதாது அணை கட்டும் முயற்சிகளை திராவிட முன்னேற்றக் கழகம் உறுதியான சட்ட நடவடிக்கைகள் மேற்கொண்டு தடுத்து நிறுத்தும்.

## ராணுவ வீரர் நலன்:

1. அக்னிபாத் திட்டம் ரத்து செய்யப்படும்.

2. இந்திய ஆயுதப் படை வீரர்களுக்கான நிரந்தர ஆட்சேர்ப்புப் பணி மீண்டும் கொண்டுவரப்படும்.

3. தேசத்தைப் பாதுகாப்பதில் அவர்களின் பங்கை அங்கீகரிக்கும் வகையில் இந்திய ஆயுதப் படையினரின் ஓய்வூதியம் மற்றும் பிற நிதிப் பலன்கள் உயர்த்தப்படும்.

# தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கான திட்டங்கள்

## சென்னை

1. பொதுமக்களின் வசதிக்காகச் சென்னையில் மூன்றாவது இரயில் முனையம் உருவாக்கப்படும்.
2. பல ஆண்டுகளாகத் தாமதப்படுத்தப்பட்டுள்ள வேளச்சேரிக்கும், புனித தோமையார்மலை ரயில் நிலையத்திற்கும் இடையில் உள்ள இரயில்வே பணி விரைந்து முடிக்கப்படும்.
3. கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள ராஜாஜி நகர் மக்கள் பயன் பெறும் வகையில் வில்லிவாக்கம் ரயில் நிலையத்திலிருந்து தெற்குப் பக்கமாகச் செல்வதற்குச் சுரங்க நடைபாதை அமைக்கப்படும்.
4. சென்னை கோயம்பேடு மெட்ரோ ரயில் நிலையத்திலிருந்து அம்பத்தூர் தொழிற்பேட்டை வரை மெட்ரோ ரயில் பாதைத் திட்டம் விரைந்து நிறைவேற்றப்படும்.
5. விம்கோ நகர் மெட்ரோ ரயில் நிலையத்திலிருந்து எண்ணூர் வரை மெட்ரோ ரயில் பாதை நீட்டித்து அமைக்கப்படும்.
6. திருவொற்றியூர் மக்களின் நீண்ட காலக் கோரிக்கையான திருவொற்றியூர் விம்கோ நகர் ரயில் நிலையத்தை ஒன்றிய அரசின் அம்ரித் பாரத் திட்டத்தின் மூலம் தரம் உயர்த்தி, வடக்கிலிருந்து வரும் அனைத்து ரயில்களும் விம்கோ நகரில் நின்று செல்ல ஏற்பாடு செய்யப்படும்.
7. மணலி சுற்றுவட்டாரப் பகுதியில் உள்ள தொழிற்சாலை மாசுகளால் ஏற்படக்கூடிய நோய்களுக்கு இப்பகுதி பொதுமக்கள் ஆளாக்கப்படுகின்றனர். இப்பகுதியில் இ.எஸ்.ஐ மருத்துவமனை அமைப்பதற்கு ஆவன செய்யப்படும்.

## திருவள்ளூர்

1. திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி வட்டம் புழல் ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ள புள்ளையன் ஊராட்சி, செங்குன்றம் பேரூராட்சியை ஒட்டி தேசிய நெடுஞ்சாலை NH5 இல் அமைந்துள்ளது. அங்கு சாலையைக் கடக்க உயர்மட்ட மேம்பாலம் அமைக்கப்படும்.
2. பழவேற்காடு முதல் கடப்பாக்கம் இடையே மேம்பாலம் அமைத்துப் புதிய சாலை அமைக்கப்படும்.

# காஞ்சிபுரம்

1. பூந்தமல்லி நெடுஞ்சாலை- தா.பி.சத்திரம் பகுதியில் போக்குவரத்து நெருக்கடி காரணமாக சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரம் சுற்றிச் செல்ல வேண்டிய சிரமத்தைப் போக்கும் வகையில் நடை மேம்பாலம் அமைக்கப்படும்.

2. திருப்பெரும்புதூர் முதல் கரைப்பேட்டை வரையிலான தேசிய நெடுஞ்சாலையை (NH 48 கி. மீ . 37.000 முதல் கி. மீ . 71.015 வரை ) ஆறு வழிச் சாலைகளாக மாற்றும் திட்டப்பணி விரைந்து முடிக்கப்படும்.

3. சென்னை சென்ட்ரல் ரயில்வே முனையம் மற்றும் சென்னை எழும்பூர் ரயில்வே முனையத்தில் நிலவும் நடைமேடை பற்றாக்குறையை எதிர்கொள்ளும் வகையில், மாற்று வழித்தடமாக அரக்கோணத்தில் இருந்து செங்கல்பட்டிற்குக் காஞ்சிபுரம் வழியாகச் செல்லும் ரயில் பாதை இருவழிப் பாதையாக மாற்றப்படும்.

4. காஞ்சிபுரம் கிழக்கு ரயில்வே நிலையத்தில் செயல்படும் பலதரப்பட்ட சரக்குப் போக்குவரத்தும், ஆசியாவின் மிகப்பெரிய ஆட்டோமொபைல் சரக்கு முனையமாகச் செயல்படும் போக்குவரத்தும் மேலும் மேம்படுத்தப்படும்.

5. காஞ்சிபுரம் மற்றும் சுற்றுவட்டார மக்களின் பன்மடங்காகப் பெருகிவரும் பயணத் தேவையைக் கருத்தில் கொண்டு கூடுதல் மின்சார ரயில் சேவை வழங்க வலியுறுத்தப்படும்.

# செங்கல்பட்டு

செங்கல்பட்டிலுள்ள ஒருங்கிணைந்த நோய்த் தடுப்புமருந்து உற்பத்தி வளாகத்தை மேம்படுத்தி, உற்பத்தியைத் தொடங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

# வேலூர்

1. பரதராமி பகுதியில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் விளையும் மாம்பழங்களைப் பயன்படுத்தி அப்பகுதியில் மாம்பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கப்படும்.

2. வேலூர் விமான நிலையம் விரைவில் செயல்பாட்டுக்கு கொண்டுவரப்படும்.

# ராணிப்பேட்டை

1. ஆற்காடு பகுதியில் அரசு கலைக் கல்லூரி அல்லது அரசு தொழில்நுட்பக் கல்லூரி அமைக்கப்படும்.

2. விளாப்பாக்கம் பேரூரில் கூட்டுறவு வங்கி அமைக்கப்படும்.

3. சேந்தமங்கலத்தில் இரயில் நிலையம் அமைக்கப்படும்.

4. நெமிலி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் கூட்டுக் குடிநீர் திட்டம்  த்தப்படும்.

5. நகரி முதல் திண்டிவனம் வரையிலான இரயில் பாதை அமைக்கும் பணிகள் விரைந்து முடிக்கப்படும்.

## திருப்பத்தூர்

1. திருப்பதி-கோவை சென்னை இண்டர்சிடி எக்ஸ்பிரஸ் ரயில் திருப்பத்தூர் இரயில் நிலையத்தில் நின்று செல்ல ஆவன செய்யப்படும்.

2. வாணியம்பாடி நியூ டவுன் LC-81 ரயில்வே கேட்டிற்கு உயர் மட்ட மேம்பாலம் அமைக்கப்படும்.

3. ஈரோட்டில் இருந்து சேலம் சந்திப்பு வழியாக ஜோலார்பேட்டைக்கு இரண்டு பயணிகள் ரயில் இருவேறு நேரங்களில் புறப்படுகிறது. ஜோலார்பேட்டையில் நின்று விட்டு மீண்டும் ஈரோடு திரும்பி செல்லாமல் இந்த இரண்டு ரயில்களில் ஒன்றை ஜோலார்பேட்டையில் இருந்து திருப்பதிக்கும், மற்றொரு ரயிலை ஜோலார்பேட்டையில் இருந்து சென்னை சென்ட்ரல் வரையிலும் நீட்டித்து இயக்க ஆவன செய்யப்படும்.

## கிருஷ்ணகிரி

1. வளர்ந்துவரும் தொழில் நகரமான ஓசூர் நகரில் ஒரு புதிய விமான நிலையம் அமைக்கப்படும்.

2. தமிழ்நாடு நுழைவாயில் ஜுஜுவாடி முதல் சிப்காட் 2 வரை பறக்கும் சாலைப் பாலம் அமைக்கப்படும்.

3. கிருஷ்ணகிரியில் இரயில் நிலையம் அமைக்கப்படும்.

4. ஜோலார்பேட்டை -ஒசூர் ரயில் சேவை கிருஷ்ணகிரி வழியாகத் தொடங்கப்படும்.

5. ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம் விரிவுபடுத்தப்படும்.

6. ஒசூர் – கிருஷ்ணகிரி - சென்னை இரயில் சேவை தொடங்கப்படும்.

7. சிப்காட்டில் மானியத்துடன் கூடிய 50 ஏக்கர் நிலத்தை விசைத்தறி தொழில் வளர்ச்சிக்கு ஒதுக்கித் தர ஆவன செய்யப்படும்.

8. ஓசூரில் இருந்து பெங்களூருக்கு மெட்ரோ இரயில் சேவை தொடங்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

9. ஓசூர் - தளி சாலையில் இரயில் மேம்பாலம் அமைக்க ஆவன செய்யப்படும்.

## தர்மபுரி

மொரப்பூர் ரயில் நிலையத்தையும் தர்மபுரி ரயில் நிலையத்தையும் இணைக்கும் வகையில் புதிய அகல ரயில் பாதை அமைக்கப்படும்.

## திருவண்ணாமலை

1. ஆரணி பகுதியில் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்கப்படும்.

2. ஆரணியில் நீண்ட காலமாகக் கிடப்பில் போடப்பட்டுள்ள திண்டிவனம் முதல் ஆரணி வழியிலான நகரி ரயில் பாதைத் திட்டம் விரைந்து முடிக்கப்படும்.

3. நெல், அரிசி வியாபாரிகளுக்கு ஊக்கம் தரும் வகையில் ஏற்றுமதி மையம் அமைக்கப்படும்.

4. பத்தாண்டுகளாக நிறுத்தப்பட்டுள்ள திருவண்ணாமலை- திருக்கோவிலூர்- மாம்பழப்பட்டு- விழுப்புரம் வழியாகச் சென்னை வரை சென்று கொண்டிருந்த தினசரி ரயில் பொது மக்களின் வசதி கருதி மீண்டும் இயக்கப்படும்.

5. திருவண்ணாமலை நகரம் ஆன்மீகம் மற்றும் விவசாயத்தைச் சார்ந்து அமைந்துள்ளதால் நகர வளர்ச்சிக்குத் தடையாக அமையவிருக்கும் புதிய டோல்கேட் ரத்து செய்யப்படும்.

## விழுப்புரம்

1. திண்டிவனம் முதல் நகரி வரையான புதிய ரயில் பாதைத் திட்டத்தில் ஆரணி நிலையத்தில் இருந்து ஒண்ணுபுரம் இணைப்புப் பாதையையும் காஞ்சிபுரம் முதல் செய்யாறு இணைப்புப் பாதையையும் சேர்க்க வழிவகை செய்யப்படும்.

2. விழுப்புரத்தில் இருந்து காட்பாடி இடையே இரு வழி ரயில் பாதை அமைக்கப்படும்.

3. உளுந்தூர்பேட்டை - விழுப்புரம் NH45 சாலையிலிருந்து பாதூர் கிராமத்திற்குச் செல்லும் வழியில் உள்ள ரயில் சாலையில் புதிய ரயில்வே மேம்பாலம் அமைக்கப்படும்.

4. உளுந்தூர்பேட்டை தொகுதிக்கு உட்பட்ட நகர் பகுதி ரயில் நிலையத்தில் மக்களின் நீண்ட நாள் கோரிக்கைபடி ஒரு விரைவு ரயிலாவது நின்று செல்ல ஆவன செய்யப்படும்.

5. சென்னை - பாண்டிச்சேரி பேசஞ்சர் ரயில் விக்கிரவாண்டி ரயில் நிலையத்தில் நின்று செல்ல வகை செய்யப்படும்.

6. தேஜஸ் விரைவு ரயில் விழுப்புரத்தில் நின்று செல்ல ஆவன செய்யப்படும்.

7. வண்டி எண் 22671/22672, வண்டி எண் 56703/56704 விழுப்புரத்தில் இருந்து திருச்சி செல்லும் பாசஞ்சர் ரயில் மறு மார்க்கத்தில் விருதாச்சலம் வரை மட்டுமே இயக்கப்படுகிறது இதனை விழுப்புரம் வரை இயக்க ஆவன செய்யப்படும்.

## கள்ளக்குறிச்சி

திருவெண்ணெய்நல்லூர் ரோடு ஆலங்குப்பம் ரயில்வே சுரங்கப் பாதையில் மழைக்காலத்தில் மழைநீர் தேங்கி நிற்காமல் இருக்க ரயில்வே சுரங்கப்பாதை, மேம்பாலமாக மாற்றி அமைக்கப்படும்.

## சேலம்

1. சேலம் விமான நிலையம் விரிவாக்கம் செய்யப்படும். பன்னாட்டு விமான நிலையம் அமைக்க பரிசீலிக்கப்படும்.

2. சேலத்தில் 1000 ஏக்கர் பரப்பளவில் ஒரு புதிய தொழில்பூங்கா அமைக்கப்படும்.

3. சேலம் மாவட்டத்தில் ஜவுளி, ஜவ்வரிசி, நார் கயிறு, கொலுசு, விவசாயம் என பல துறைகளில் உற்பத்தி அதிக அளவில் செய்யப்படுகிறது. எனவே, அங்கு ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டு மையம் அமைக்கப்படும்.

## நாமக்கல்

1. ஈரோடு மாவட்ட பாசூரையும் நாமக்கல் மாவட்ட சோழிராமணியையும் இணைக்க ரயில்வே மேம்பாலம் அமைக்கப்படும்.

2. நாமக்கல்லில் சிறப்பு முட்டை ஏற்றுமதி மையம் அமைக்கப்படும்.

## ஈரோடு

1. ஈரோடு ரயில் நிலையம் முதல் காங்கேயம், தாராபுரம், பழனி ரயில் நிலையம் வரை புதிய அகல ரயில் பாதைத் திட்டம் நிறைவேற்றப்படும்.

2. ஈரோடு நாடாளுமன்றத் தொகுதியில் ஒன்றிய அரசின் புற்றுநோய் ஆராய்ச்சி மையம் அமைக்க ஆவன செய்யப்படும்.

## திருப்பூர்

மக்காச்சோளம், சோயா போன்ற ஏராளமான விவசாயப் பொருள்கள் இந்திய இரயில்வே - சரக்கு வண்டிகள் மூலம் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்து நமது தமிழ்நாட்டிற்குக் கொண்டு வரப்படுகின்றன. இந்த முக்கிய இடுபொருள் தானியங்களின் விலையைக் குறைக்க கட்டணச் சலுகைகளை வழங்கிடப் பரிந்துரைக்கப்படும்.

## நீலகிரி

1. நீலகிரி மாவட்டத்தில் முக்கியப் பொருளாதாரமான சிறு தேயிலை விவசாயிகளின் பச்சைத் தேயிலைக்குக் குறைந்தபட்ச விலையாக கிலோ ரூபாய் 35 ஆக நிர்ணயிக்கப்படும்.

2. நீலகிரி மாவட்டத்தில் உள்ள சுற்றுலாத்தலங்கள் மற்றும் சுற்றுலாத் தலங்களுக்குச் செல்லும் வழித்தடங்கள் இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் மேம்படுத்தப்படும்.

## கோவை

1. தமிழ்நாடு வியாபாரிகளுக்காக இரவு நேரங்களில் கோவையில் இருந்து தென் மாவட்டங்களுக்கு இரயில் சேவை ஏற்படுத்தப்படும்.

2. பொள்ளாச்சி இளநீர் மற்றும் தேங்காய்க்கு GI Tag கொண்டுவரப்படும். பொள்ளாச்சியில் COLD STORAGE மையம் அமைக்கப்படும்.

3. பொள்ளாச்சி ரயில் நிலையம் புனரமைக்கப்படும்.

4. சேரன் விரைவு ரயில் சேவை பொள்ளாச்சி வரை நீட்டிக்கப்படும்.

5. கோவை மெட்ரோ ரயில் திட்ட சேவையைத் திருப்பூர் வரை நீட்டிக்க வழிவகை செய்யப்படும்.

6. மேட்டுப்பாளையம்-சத்தியமங்கலம் -கோபிசெட்டிபாளையம்- ஈரோடு அகல ரயில்பாதைத் திட்டம் நிறைவேற்றப்படும்.

## பெரம்பலூர்

ஆத்தூர் ரயில் நிலையம் முதல் பெரம்பலூர், அரியலூர் ரயில் நிலையம் வரை புதிய அகல ரயில் பாதை அமைக்க ஆவன செய்யப்படும்.

# அரியலூர்

1. அரியலூர் முதல் சிதம்பரம் வரை ஜெயங்கொண்டம், காட்டுமன்னார்குடி வழியாகப் புதிதாக இரயில் பாதை அமைத்து இரயில் சேவை ஏற்படுத்தப்படும்.
2. அரியலூர் நகராட்சியில் அமைந்துள்ள இரயில் நிலையத்தில் விரைவு மற்றும் சிறப்பு இரயில்கள் நின்று செல்ல வழிவகை செய்யப்படும்.

# திருச்சி

1. திருச்சி பொன்மலை ரயில்வே பணிமனையை ரயில் பெட்டித் தொழிற்சாலையாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இந்த பணியில் திருச்சி பி.எச்.இ.எல் நிறுவனமும் இணைந்து பணியாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.
2. தேசிய நெடுஞ்சாலையில் பால்பண்ணை முதல் துவாக்குடி வரை உயர்மட்டச் சாலை அமைக்கப்டும்.

# கடலூர்

1. முந்திரி ஏற்றுமதியாளர்களுக்கு, ஒன்றிய ஏற்றுமதி ஊக்கத்தொகை (RoTDEP) 5% மீண்டும் வழங்கிட ஏற்பாடு செய்யப்படும்.
2. பழைய முந்திரி மரங்களை அகற்றி, அதிக மகசூல் தரும் புதிய வகை முந்திரிக் கன்றுகளை மானியத்துடன் வழங்கிட ஆவன செய்யப்படும்.
3. பெண்ணாடம் ரயில் நிலையத்தைத் தரம் உயர்த்தி தென்பகுதி மற்றும் சென்னைக்குச் செல்லும் அனைத்து வகை ரயில்களும் நின்று செல்ல ஏற்பாடு செய்யப்படும்.

# மயிலாடுதுறை

30 ஆண்டுகளுக்கு முன்பு மூடப்பட்ட, மயிலாடுதுறை மற்றும் தரங்கம்பாடி புகைவண்டித் தடத்தை சீரமைத்து, காரைக்கால், நாகூர், வேளாங்கண்ணி, திருநள்ளாறு பயணிகள் பயணம் செய்ய ஏதுவாக அமைத்துத் தரப்படும்.

# நாகப்பட்டினம்

நாகை துறைமுகத்தைச் சரக்குப் பெட்டகத் துறைமுகமாக மாற்றிட அல்லது வெள்ளப்பள்ளம் அருகே சரக்குப் பெட்டகத் துறைமுகம் அமைக்க ஆவன செய்யப்படும்.

## தஞ்சாவூர்

1. பட்டுக்கோட்டை ரயில் வழித் தடத்தில் கம்பன் எக்ஸ்பிரஸ் ரயில் மீண்டும் இயக்கப்படும்.

2. பட்டுக்கோட்டை - மன்னார்குடி புதிய ரயில் பாதை அமைக்கப்படும், மேலும் ஒன்றிய அரசில் தி.மு.கழகம் பங்கேறிருந்த காலத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் வைத்த கோரிக்கையான பட்டுக்கோட்டை - தஞ்சாவூc புதிய ரயில் பாதை அமைக்கப்படும்.

## திருவாரூர்

திருவாரூரில் தேசிய வேளாண் ஆராய்ச்சி மையம் அமைக்கப்படும். மற்றும் திருவாரூர் மத்திய பல்கலைக்கழகத்தில் சட்டப்படிப்பு தொடங்கப்பட ஆவன செய்யப்படும்.

## புதுக்கோட்டை

தஞ்சாவூர்,கந்தர்வக்கோட்டை,புதுக்கோட்டை,திருப்பத்தூர்,வேலூர்,மதுரை வரை புதிய இரயில் பாதை அமைத்து புதுக்கோட்டை இரயில்வே நிலையம் புனரமைக்கப்படும்.

## திண்டுக்கல்

1. திண்டுக்கல் – சபரிமலை இடையே இரயில் சேவை அமைக்க ஆராயப்படும்.

2. திண்டுக்கல்லில் இருந்து சென்னைக்குத் தனி ரயில் வசதி ஏற்படுத்திட பரிசீலிக்கப்படும்.

## சிவகங்கை

காரைக்குடி முதல் நத்தம் வரை 4 வழிச் சாலை, (வழி சிங்கம்புணரி, கொட்டம்பாட்டி) அமைக்கப்படும்.

## மதுரை

1. மதுரை - திருப்பதி ரயில் மீண்டும் தொடங்குவதற்கான முயற்சிகளை முன்னெடுக்க ஒன்றிய அரசிடம் தி.மு.க. பரிந்துரைக்கும்.

2. மதுரையில் இருந்து போடி வரை செல்லும் ரயிலை லோயர் கேம்ப் வரை நீட்டிக்க ஆவன செய்யப்படும்.

3. மதுரை விமான நிலையம் சர்வதேசத் தரத்திற்கு உயர்த்தப்படும்.

4. மதுரையில் ஒன்றிய அரசின் தொழில் நிறுவனங்கள் அமைக்கப்படும்.

## தேனி

1. பேபி அணையையும் முல்லைப் பெரியாறு அணையையும் பலப்படுத்த ஆவன செய்யப்படும்.

2. வாழை மற்றும் திராட்சை ஆகியவற்றிற்குத் மதிப்புக் கூட்டல் தொழிற்சாலைகள் அமைக்கப்படும்.

## விருதுநகர்

1. காரியாபட்டி இரயில்வே நிலையம் அமைக்கப்படும்.

2. சிவகாசி பட்டாசுத் தொழிலைப் பாதுகாக்க சீனப் பட்டாசு இறக்குமதி தடை செய்யப்படும்.

## இராமநாதபுரம்

1. இராமநாதபுரம் மாவட்டம் பிரப்பன்வலசை ரயில்வே வழித்தடத்தைக் கடக்க சாலை மேம்பாலம் அமைக்கப்படும்.

2. இராமேஸ்வரம் - சென்னை, இராமேஸ்வரம் - கன்னியாகுமரி இடையே சுற்றுலா கப்பல்/படகுப் போக்குவரத்துச் சேவை ஏற்படுத்தப்படும்.

## தூத்துக்குடி

1. தூத்துக்குடியில் இருந்து இலங்கைக்குக் கப்பல் போக்குவரத்து ஏற்படுத்தித் தரும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

2. தூத்துக்குடி விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாகத் தரம் உயர்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

3. முத்துநகர் விரைவு ரயில் சேவை போல், சென்னை செல்ல மேலும் ஒரு இரயில் சேவை ஏற்படுத்தப்படும்.

4. தூத்துக்குடி வி.எம்.எஸ் நகரில் ஐந்தாவது ரயில்வே கேட் மற்றும் மேம்பாலம் அமைக்கப்படும்.

5. நாசரேத் பகுதியில் கடந்த 21 ஆண்டுகளுக்கு முன் மூடப்பட்ட திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பாலை அமைந்திருந்த இடத்தில், பொதுமக்களும் சிறு, குறு வியாபாரிகளும் பயன்பெறும் வகையில் மாற்றுத்தொழிற்சாலை அமைத்து, இப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கவும், இங்குள்ள வணிகர்களின் வாழ்வாதாரத்தைக் காத்திடவும் ஆவன செய்யப்படும்.

6. நாசரேத்திலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் பிடாரனேரி கிராமத்தில் உள்ள சிட்கோ தொழிற்பேட்டை அமைந்துள்ள பகுதியில் புதிய தொழில் நிறுவனங்களை நிறுவி அப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தி, வாழ்வாதாரம் காத்திட ஆவன செய்யப்படும்.

7. காயல்பட்டினம் மற்றும் மீளவிட்டான் ரயில் நிலையங்கள் மேம்படுத்தப்படும்

8. தூத்துக்குடியில் உற்பத்தியாகும் பனைபொருள்களுக்கு மதிப்பு கூட்டி ஏற்றுமதி செய்ய வழி வகை செய்யப்படும்.

## திருநெல்வேலி

1. திருநெல்வேலியைத் தலைமை இடமாகக் கொண்டு திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களை உள்ளடக்கிய புதிய ரயில்வே கோட்டம் அமைக்க ஆவன செய்யப்படும்.

2. அம்பாசமுத்திரம், வி.கே.புரம் சாலையில் அம்பை ராணி பள்ளியின் அருகில் உள்ள ரயில்வே கேட்டில் உயர் மட்ட மேம்பாலம் அமைக்கப்படும்.

3. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள எட்டு கடற்கரை கிராமங்களிலும் தூண்டில் வளைவு இல்லாத கிராமங்களுக்குத் தூண்டில் வளைவு அமைக்கப்படும்.

## தென்காசி மாவட்டம்

1. திருநெல்வேலி- சங்கரன்கோவில் ரயில் நிலையங்களை இணைக்கும் வகையில் ஆலங்குளம், சுரண்டை, சேர்ந்தமரம் வழியாகச் சங்கரன்கோவிலை இணைக்கும் புதிய ரயில்பாதை அமைக்கும் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படும்.

2. கேரளா, கோவை மற்றும் சென்னை செல்லும் ரயில்கள் கடையம் ரயில் நிலையத்தில் நின்று செல்ல வழிவகை செய்யப்படும்.

## கன்னியாகுமரி

1. கன்னியாகுமரி முதல் களியக்காவிளை வரை மற்றும் காவல்கிணறு முதல் நாகர்கோவில் வரை நான்கு வழிச் சாலைக்காக நிலங்களை இழந்தவர்களுக்கு இழப்பீட்டுத் தொகையை உடனடியாக வழங்க ஆவன செய்யப்படும்.

2. குமரி மாவட்டத்தில் கிடைக்கும் மீன்களைப் பதப்படுத்தி வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத் தகுந்த வகையில் நவீன தொழில்நுட்பத்துடன் மீன் பதப்படுத்தும் நிலையம் உருவாக்கப்படும்..

3. விளவங்கோடு தொகுதியில் ரப்பர் தொழிற்சாலை அமைக்க ஆவன செய்யப்படும்.

4. ஏ.வி.எம் கால்வாயைச் சுத்தம் செய்து மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர ஆவன செய்யப்படும்.

* * *

**தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கும் இந்திய நாட்டின் வளர்ச்சிக்கும் உதவும் வண்ணம். இந்தத் தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டுள்ள திட்டங்களை எல்லாம் நிறைவேற்றிட, திமுக கூட்டணியில் போட்டியிட்டு, மக்களவை உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படும் வேட்பாளர்கள் அனைவரும் தொடர்ந்து பாடுபடுவார்கள் என்று மக்களுக்கு நாங்கள் உறுதி அளிக்கிறோம்.**

## அ.தி.மு.க வின் மக்கள் விரோத, தமிழர் விரோத நடவடிக்கைகள்

**பத்தாண்டு காலம் தமிழ்நாட்டை ஆட்சி செய்த அ.தி.மு.க தமிழ்நாட்டை தொழில் வளர்ச்சியில் இந்தியாவின் கடைசி இடத்திற்கு கொண்டு வந்தது. தமிழ் மொழி, இன உணர்வுகளுக்கு மாறுபட்டு பா.ஜ.க வின் ஒரே நாடு, ஒரே தேர்தல் என்ற முழக்கத்திற்கு ஓடிச்சென்று ஆதரவு தெரிவித்து, தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் மாறுபாடாகச் செயல்பட்டது. அதுபோலவே பா.ஜ.க அரசு கொண்டு வந்த குடியுரிமைத் திருத்தச் சட்டத் திருத்தத்தில் இலங்கைத் தமிழர்களையும் இணைக்க வேண்டும் என்று தி.மு.கழகம் கொடுத்த சட்டத்திருத்தத்திற்கு எதிராக வாக்களித்து சட்டம் நிறைவேற மூல காரணமாக இருந்தது.**

**இப்படி தமிழ்நாடு, தமிழ் மக்கள் முன்னேற்றத்திற்கும் சுயமரியாதை உணர்வுகளுக்கும் விரோதமாகச் செயல்பட்டுவரும் அ.தி.மு.க, பா.ஜ.க இரண்டு கட்சிகளுமே தமிழ்நாட்டிலிருந்து அப்புறப்படுத்தப்படவேண்டியவை ஆகும்.**

**இந்நிலையில் ஒன்றிய அரசில் திராவிட முன்னேற்றக் கழகம் இடம் பெற்றிருந்த போதும், தமிழ்நாட்டில் ஆட்சியில் இருந்தபோதும், ஆற்றிய சாதனைகள் நிறைந்த வரலாற்றைத் தமிழ்நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.**

**தமிழ்நாடும்-இந்தியத் திருநாடும் முன்னேற்றம் கண்டிட, நாடாளுமன்ற ஜனநாயகக் கடமையை நாங்கள் முனைப்புடன் நிறைவேற்றுவோம் என்றும்,**

திமுக மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்புக்கு எந்தக் குறையும் ஏற்படாத வண்ணம் உறுதியுடன் தொடர்ந்து பணியாற்றுவோம் என்றும் இந்தத் தேர்தல் அறிக்கையின் மூலம் நாங்கள் வாக்குறுதி அளிக்கிறோம்.

எனவே, பாசிச ஆட்சி அகன்றிட - இந்திய மதச் சார்பற்ற தன்மை காக்கப்பட, ஓயாது உழைக்க நாங்கள் தயார். உத்திரவிடுங்கள் எங்களுக்கு என வேண்டுகிறோம்!

மாநில சுயாட்சியை மதிக்கும் கூட்டாட்சி அரசை உருவாக்குவோம்!

மதச்சார்பற்ற இந்தியக் கூட்டணி அரசை அமைப்போம்!

மதங்களுக்கிடையே நல்லிணக்கம் பேணுவோம்!

மனித உரிமைகளைக் காப்போம்!

சமூகநீதி போற்றுவோம்! சமத்துவம் வளர்ப்போம்!

தொழில்வளம் பெருக்குவோம்!

பொருளாதார வளர்ச்சியில் உலகப்புகழ் குவிப்போம்!

ஜனநாயகம் தழைத்தோங்க சளைக்காமல் உழைப்போம்!

ஒன்றுபடுவோம்! வெற்றி காண்போம்!

**வாழ்க தமிழ்நாடு! வெல்க இந்தியா!**

❖ ❖ ❖

ஆதரிப்பீர் உதயசூரியன்!

அச்சிட்டோர்: அஸ்வின் பிரிண்டிங் ஏஜென்சி, சென்னை-14.

வெளியீடு: தி.மு.க. தலைமைக் கழகம்